
# ஆத்மஜோதி



காளிகாமடு கற்பக விநாயகர் ஆலயம்



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்

ஜோதி 16 குரோதி ௵ ஆடி ௴ 1௳ [15-7-64] சுடர் 9

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ காளிகாமடு கற்பகவிநாயகர் பேரில் பாடிய வசந்தன் காவியம் | 317 |
| 2 | ஆனந்தத் தேன் | 319 |
| 3 | ஆனினம் மேய்த்து ஆண்டவனாகிய அந்தணச் சிறுவன் | 322 |
| 4 | ஸ்ரீ காளிகாமடு கற்பக விநாயகர் ஆலய வரலாறு | 325 |
| 5 | சரணடைந்தேன்! | 334 |
| 6 | அப்பர் அறிவாலும் உணர்வாலும் இறைவனைக் காணும் விதம் | 335 |
| 7 | ஸ்ரீ காளிகாமடு கற்பக விநாயகர் ஊஞ்சல் | 344 |
| 8 | ஆண்டவனிடம் வேண்டுவது யாது? | 347 |
| 9 | கதை கேட்ட கள்வன் கண்ணனைக் கண்டான் | 351 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா ரூபா 75.00 வருட சந்தா ரூபா 3.00
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா
''ஆத்மஜோதி நிலையம்'' நாவலப்பிட்டி. [சிலோன்]
தொலைபேசி எண் 353


## ஸ்ரீ காளிகாமடு கற்பக விநாயகர் பேரில் பாடிய வசந்தன் காவியம்

தரு:-

தனதனதத்தத் தன்தன தத்தத்
தனதன தத்தத் தன தான
தனதன தத்தத் தனதன தத்தத்
தனதன தத்தத் தனதான

1. அண்டர்கள் புகழத் தொண்டர்கள் மகிழ
அழகுடன் வாறவர் ஆர்மானே-நல்ல
கண்டவர் புகழும் காளிகா மடுவுறை
கணபதி யாமடி காரிகையே -தனதன

2. தனதன தன்னத் தவில் முரசதிர
தயவுடன் வாறவர் ஆர்மானே-நல்ல
கனதன மென்ற கரிமுகமுடைய
கணபதி யாமடி காரிகையே -தனதன

3. எலிதனில் ஏறி இசையவர் போற்ற
வழிதனில் வாறவர் ஆர்மானே-நல்ல
கதிரையில் முருகற் கருளது கொடுக்கும்
கணபதி யாமடி காரிகையே -தனதன

4. மோதக மதனைச் சோதனை பண்ணி
பாதையில் வாறவர் ஆர்மானே-நல்ல
பால்தயிர் வெண்ணெய் தேடி எடுப்போன்
மருமக னாமடி பைங்கிளியே -தனதன

5. வயிறு சரிய வடகிரி நெளிய
வழிதனில் வாறவர் ஆர்மானே-நல்ல
கனதன மென்ற கரிமுக முடைய
கணபதி யாமடி காரிகையே -தனதன

6. மாலை பதக்கம் பளபள வென்ன
வழிதனில் வாறவர் ஆர்மானே-நல்ல
கண்டவர் புகழும் காளிகா மடுவுறை
கணபதி யாமடி காரிகையே -தனதன

7. மடமடநடன மங்கையர் மகிழ
மகிழ்வுடன் வாறவர் ஆர்மானே-நல்ல
கதடதட விதடக்குட வயிறுடைய
கணபதி யாமடி காரிகையே -தனதன

8. பரிபுர ஈசையப் பலர் தொனியார்ப்ப
பவனியில் வாறவர் ஆர்மானே-நல்ல
கதிரையில் முருகற் கருளது கொடுக்கும்
கணபதி யாமடி காரிகையே -தனதன

9. மணிமுடி மின்ன மாலைகள் துன்ன
மகிழ்வுடன் வாறவர் ஆர்மானே-நல்ல
காசினி மீதில் பாவமத கற்றும்
கற்பகமாமடி காரிகையே -தனதன

10. தேவர்கள் மகிழ முனிவர்கள் புகழ
சிறப்புடன் வாறவர் ஆர்மானே-நல்ல
படிய தளக்கும் பரமனுர் பெற்ற
பாலகனுமடி பைங்கிளியே -தனதன.





# ஆனந்தத் தேன்

(ஆசிரியர்)

தேன் என்று சொல்லும்போதே, நாவில் நீர் சுரந்து வருகிறது. காரணம் அடிக்கடி தேனை உண்டு அனுபவித்துள்ளோம். அந்த அனுபவம் தேன் என்று சொல்லும்போதே நாவினில் தித்திப்பை ஏற்படுத்தி நீரையும் சுரக்கச் செய்கின்றது. இதுபோல ஆண்டவனை நினைக்கும்போது ஆண்டவனைப்பற்றிய உணர்வு எழுகின்றதா என்பது கேள்வி? ஆண்டவனை உலகில் எல்லாரும் நினைப்பதுபோல் நினைக்கின்றோம். மனத்தோடுபடாமலே அவன் நாமத்தை உச்சரிக்கின்றோம். உணர்வதில்லை; நெகிழ்வதில்லை. கிளிப்பிள்ளைப் பாடமாகவே நிகழ்ந்து வருகின்றது.

• •

தலைவி ஒருத்தி, முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்; மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்; பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்; பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனுள். இதுதான் இறைவனை அனுபவிக்கும் அனுபவம். இது அருளனுபவம் ஆகும். மகான்கள் எல்லாரும் இந்த அருளனுபவத்தைத்தான் அனுபவித்தார்கள். தாம் பெற்ற இன்பம் வையகமும் பெற வழிகாட்டினுர்கள்.

ஆனந்தம் என்பது அனுபவித்து உணரவேண்டிய தொன்று. அது வாய்விட்டுப் பேசொணுதது. நினைந்து நினைந்து; உணர்ந்து உணர்ந்து; நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து அனுபவிக்க வேண்டியதொன்று; நினைக்குந்தோறும், காணுந்தோறும், பேசுந்தோறும் எப்போதும்தேன் இனிப்பது. இது தூலத்தில் கண்ட அனுபவம். ஆனந்தமும் இத்தகையதே. இது சூக்குமத்தில் அனுபவிக்கும் இன்பநிலையாகும். ஆகவே மணிவாசகப் பெருமானுர் இரண்டையும் ஒன்றுசேர்த்து,

நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தெலும்புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்

என்று திருவாய் மலர்ந்தார். இந்த ஆனந்தத்தேனைச்சொரிபவன்தான் ஆண்டவன். வண்டுபூக்கள்தோறும் ஆராய்ந்து ஆராய்ந்து தேனை எடுக்கின்றது. இரவாகப் பகலாகத் தேன்

சேர்ப்பதிலேயே தன்னுடைய காலம்முழுவதையும் கழிக்கின்றது. அவ்வளவு தேனையும் சேர்த்துத்தான் குடித்து அனுபவிக்க வேண்டுமென்று அது விரும்புவதில்லை. பரோபகாரத்திற்காகவே தேனைச் சேர்த்து வைக்கின்றது. நாலறிவுயிராகிய தேனீ செய்யும் பரோபகாரம் கூட மனிதனிடத்துக் காணப்படுவதில்லை.

இதேபோல ஆண்டவனும் பக்தர்களின் இதயதாமரையிலே பக்தித்தேனை சென்று சென்று சேர்த்துக் கொள்ளுகின்றான். அங்ஙனம் சேர்த்த ஆனந்தத் தேனை தானேவலியக் கொண்டு சென்று பக்தர்களுக்கு ஊட்டுகின்றான், எந்தநேரமும் ஊட்டிக் கொண்டே இருக்கின்றான். நாம் தான் அதனை உண்பதற்கு வாயைத் திறக்கின்றோமில்லை. அதனை உண்பதற்கு எம்மை ஆயத்தப்படுத்திக்கொள்கின்றோமில்லை. நாவுக்கரசுப் பெருமான் உலகத்து மக்களை விழித்து ''மனிதர்காள் இங்கே வம்'' என்று அழைக்கின்றார். அழைத்து ''கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரே'' என்று கேட்கின்றார். பழம் தந்தால் சாப்பிடுவீர்களா? அப்பழத்தைச் சாப்பிடும் வல்லமை உடம்பில் இருக்கிறதா? என்பதுதான் கேள்வி.

நோயாளனுக்குச் சில பழங்களோ அல்லது உணவுகளோ கொடுக்கக்கூடாது. அவற்றை ஏற்றுக்கொள்ளும் உடல்நிலை அவனிடம் இல்லை. பித்தக்காய்ச்சல் உள்ளவனுக்குத் தேனைக் கொடுத்தால் கசக்கும் என்று சொல்லுவான். அதுதேனுடைய பிழை அல்ல. அவனுடைய நாவின் பிழையாகும். அதேபோல ''புனிதன் பொற்கழல் ஈசன் எனும்'' கனியை உண்பவர்களுக்கும் அதனை ஏற்றுக்கொள்ளும் நிலை அமைய வேண்டும். நாம் எல்லாரும் ஆணவ நோயால் பீடிக்கப்பட்டுள்ளோம். அந்நோய் நீங்கினால்தான் ''புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனியை அனுபவிக்கலாம்.

இறைவன் ஆனந்தத் தேனைச் சொரிந்து கொண்டே இருக்கின்றான். அதனை ஏற்று அனுபவிக்க வேண்டியது எமது கடமையாகும். அதற்கு எம்மைத்தயார்ப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டியதும் எமது முயற்சியாகும்.

இந்த ஆனந்தத்தேனைச்சொரிந்துகொண்டிருக்கும் இறைவனைத் தேடிநாம் எங்கே போவது? அவனைக் கண்டு பிடிப்பது எப்படி? என்றெல்லாம் அன்பர்கள் உள்ளத்தில் கேள்வி எழ



லாம். அவன் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்தவன். நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன். ஆகவே அவனைத்தேடி எங்கும் திரிய வேண்டியதில்லை, எம்மோடுகூடவே உடனுறைகின்றான். நாம் வாய்விட்டு அழைக்க வேண்டியதே எமது வேலை. அவன் ஏன் என்று கேட்பதற்கு எங்களுக்குப் பக்கத்திலேயே எப்போதும் நின்று கொண்டிருக்கின்றான் ''புறம் புறம் திரிந்த செல்வமே'' என மணிவாசகர் உருகுகின்றார்.

''எத்திக்குந் தானாகி யென்னிதயத் தேயூறித்
தித்திக்கு மானந்தத் தேனே பராபரமே''

என்பது தாயுமானவர் வாக்காகும். எல்லாத்திக்குகளிலும் இருக்கின்ற இறைவனேதான் எனது மனத்தினிடையே சதா இனிமையுடன் விளங்குகின்றான். ஆனந்தத்தேனை அள்ளிச் சொரிகின்றான். வாரி வழங்குகின்றான்.

இதயம் கமல மலர்; இறைவன் இதயத்துள்ளும் இருக்கின்றான். ஆகவே அவன் இடைவிடாது தித்திக்கும் ஆனந்தத்தேன் ஆகின்றான்.

## அந்தர் யோகம்

இடம்:– கொழும்பு விவேகானந்த சபைக்குப் பக்கத்தில் இருக்கும் ஸ்ரீ மோடி மண்டபம்.

காலம்;– 24 . 7 . 64 வெள்ளிமாலை தொடக்கம்
26 . 7 . 64 ஞாயிறு மாலை வரை.

பெரியவர்கள் முற்பணமாக 10 ரூபா அனுப்பியும் மாணவர்கள் முற்பணமாக 5. ரூபா அனுப்பியும் தம்மைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்க.

காரியதரிசி, திவ்யஜீவனசங்கம், தம்பையா சத்திரம்,
30, அந்தோனி மாவத்தை, கொழும்பு 13

# ஆனினம் மேய்த்து ஆண்டவனாகிய அந்தணச் சிறுவன்

(பண்டிதர், செ. பூபாலபிள்ளை அவர்கள்)

உலகத்தில் உள்ள உயிரினம் அனைத்தினுஞ் சாலச் சிறந்தவை ஆனினம். மாயோன் மேவிய காடுறை உலகத்து வாழ்வன அவை. சிவபெருமானது திருமுழுக்குக்கு வேண்டிய தூய பால் தயிர் நெய் கோமயம் கோசலமாகிய ஐந்தினையும் உதவுவன ஆனினம். அவற்றின் கோமயத்தை முறைப்படி சுட்டுத் திருநீற்றை நாம் பெறுகின்றோம். திருநீற்றையுந் திருவைந் தெழுத்தையும் விட நமக்கு உறுதுணை புரிவன எவை உள? உலக உயிரனைத்தையும் உண்டி கொடுத்து ஓம்பும் உழவர் பெருமக்களுக்குத் தந்தை போலவுந் தாய் போலவும் மகவு போலவும் உதவுவன ஆனினம் அன்றோ? மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்ற நல்லதொரு பொருளைக் கண்டவர் நமது முந்தையோர், மாட்டுரம் வயல் விளைவை உயர்த்துகிறது.

தந்தை அன்றோ வயலில் உழைக்குந் தக்க எருது
சிந்தை மகிழ்ந்தே பாலை ஊட்டுஞ் சிறந்த தாயாம்
மந்தை வளர்ந்து மருவிப் பாலை வழங்கும் பசுவே
சொந்த மகவு துயரந் தீர்க்கும் புனித கன்றே.

தூய பசுவின் திருவுடலிலே தீர்த்தங்களெல்லாம் அமைந்துள்ளன. பரிசுத்தம் பொருந்திய தேவர்களும் முனிவர்களுங் கூடப் பசுவின் திருவுடலில் அமர்ந்துள்ளனர். தருமவடிவாகிய வெள்ளை எருது சிவபெருமானுடைய வாகனமாக அமைந்திருக்கிறது. பாலூட்டும் பசுவினையும் பாலைமுட்டிக் குடித்துத் துள்ளிக் குதித்து வாளி பாய்ந்து ஓடி விளையாடுங் கன்றினையும் பார்த்து மகிழாதார் இவ்வுலகிலுண்டோ?

அம்மா வென்றே கன்றதனை அழைத்துக் கொஞ்சிப் பசுபாலை
விம்மிச் சுரந்து சலம்விட்டு விரும்பி நக்கி யேயூட்டும்
செம்மை யாக முலைமுட்டிச் சிறப்பால் வாலை அசைத்தாட்டி
அம்மென் வாயால் நுரைபறக்க அழகு கன்று பால்குடிக்கும்,

பசுவைப் பாதுகாக்காது அலைந்துதிரிய விடுவதும், அடித்துத் துன்புறுத்துவதும், பெரிய பாவங்களாகும். ஆவுரித்து



அதன் இறைச்சியை உண்டு மகிழ்ந்து உழல்வோர் அற்பப் புலையராவர். இவர்கள் தொகை ஈழத்தில் வரவர அதிகரிக்கிறது என்பதைக் கேட்பதே எமக்குப் பெரும் அருவருப்பாக இருக்கிறது. சிலப்பதிகார மதுரைக் காண்டத்து, கண்ணகி கோவலனுக்கு வழித்துணையாகச் சென்ற கவுந்தி அடிகள் ஆகாத்தோம்பும் இடையர் வாழ்க்கையில் ஒரு கொடுமைப்பாடும் இல்லை என விதந்தெடுத் தோதுகின்றார்.

“ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்குங்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை” என்பது அது.

முற்காலத்திலே சோற்றுக்குக் குறைவில்லாத சோழவள நாட்டிலே மண்ணியாற்றின் தென்கரையிலே அமைந்துள்ள அழகு சேய்ஞலூரிலே அந்தணாளர் பலர் வாழ்வாங்கு வாழ்ந்து இன்புற்றனர். இவர் ஓதல் ஓதுவித்தல் ஈதல் ஈவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஆகிய அறுதொழில்களையும் வேத ஆகம விதிப்படி புரிந்தனர், இவற்றால் சேய்ஞலூர் செழுமையுடையதாயிற்று.

‘பண்ணின் பயனா நல்லிசையும் பாலின் பயனா மின்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகொளியுங் கருத்தின் பயனா மெழுத்தஞ்சும்
விண்ணின் பயனாம் பொழிமழையும் வேதப்பயனாம் சைவமும் போல்
மண்ணின் பயனாம் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்
தோ”.

என்று இந்த ஊரைப் போற்றிப் புகழுகின்றார் திருத்தொண்டர் புராணம் பாடியருளிய சேக்கிழார் சுவாமிகள்.

இந்தத் திருச்சேய்ஞலூரிலே காசிப கோத்திரத்திலே எச்ச தத்தனுக்கும் பவித்திரையாருக்கும் ஏகபுத்திரராக விசாரசருமர் திரு அவதாரஞ் செய்தார். இவர் தமது சிறுபராயத்திலே கல்வித்துறையில் மேம்பட்டு விளங்கினார். இந்தப் பருவத்திலே கல்விப்பயன் கடவுளை அடைதல் என்ற பூரண உண்மை இவர் மனத்து உதயமாயிற்று. நான் உடைமை; உடையவர் நடராசப் பெருமான்; என்ற ஞான உணர்வுடன் இவர் சிவபக்தியிற் சிறந்து விளங்கினார். விசாரசருமருடைய ஊரிலுள்ள அந்தணாளருடைய பசுக்களை எல்லாம் ஒரு இடையன் கூலிக்கு மேய்த்து வந்தான். ஒருதினம் இளங் கன்றுப் பசு ஒன்று இவனை எதிர்த்து முட்டவந்தது. இவன் ஒரு கோலை எடுத்து இதனை நையப்புடைத்தான். இதனைக் கண்ணுற்ற விசாரசருமர் மனமடிவுற்றார். ஆவின்

பெருமைகளை இடையனுக்கு எடுத்தோதினார். 'இனி நீ இந்த நிரைகளை மேய்க்க வேண்டாம். நானே இந்த நிரைகளை மேய்ப்பேன்' என்றார். இடையனும் இவருரை கேட்டு அஞ்சி நிரைகளை இவரிடம் ஒப்படைத்துத் தனது வீட்டுக்குச் சென்றான். சேய்ஞலூரில் வாழ்ந்த பசுச் சொந்தக்காரராகும் அந்தணாளருடைய உடன் பாட்டின்படி தெய்வ மறைச் சிறுவராகும் விசாரசருமரே அன்றுமுதல் அந்த ஆனினத்தை மேய்த்து வந்தார்.

இவர் பசுக்களுக்குப் பசும்புல், தெளிந்த நீர்களைக் காட்டுவார். வெய்யில் வேளைகளில் மரநீழலில் உறங்க வீடுவார். பால் கறக்கும்வேளை தவறாது அவற்றை உடையவர் விடுகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார். இந்த அழகுச் சிறுவர் கோலுங், கயிறுங் கொண்டு குடுமிகுலைந்து அலைய பூணூலும் மான்தோலும் மார்பிற் புரள கோவண உடை பிரகாசிக்க ஆநிரையை இடந்தோறும் இடந்தோறும் ஓட்டிச் சென்று மேய்க்கும் அழகினைப் பாருங்கள்:—

"கோலுங் கயிறுங் கொண்டுகுழைக் குடுமி அலையக் குலவுமான்
தோலு நூலுந் சிறுமார்பில் துவள அரைக்கோ வணஞ்சுடரப்
பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையினால்
சாலும் புல்லின் அவைவேண்டுந் தனையும் மிசையுந் தலைச்சென்று.'

இதனால் நந்தை, பத்திரை, சுரபி சுசீலை சுமனை என்னுங் கபிலநிறமும் கருநிறமும் வெண்ணிறமும் புகைநிறமும் செந்நிறமும் உடைய பசுக்குலம் அனைத்தும் அழகாக விளங்கின. முலைவிம்மித் தூய பால் சுரந்தன. இவற்றைக் கண்டு மறையவரெல்லாம் மனமிக மகிழ்ந்தனர்.

பசுவினமோ தமது கன்றைப் பிரிந்த போதும் தம்மீது அன்பு பூண்டு ஆதரிக்கும் விசாரசருமப் பிராமணக் கன்றை கண்டு அதன் அருகு சார்ந்து மனம் உருகிக் கனைத்துப் பால் சுரந்து முலைபிடித்துக் கறவாதிருக்கும் போதும் பால் சொரிந்தன. இந்த அற்புதத்தைக் கண்ணுற்ற சிவபக்தராகிய விசாரசருமருக்கு இந்தப் பாலைக் கொண்டு திருமஞ்சனம் ஆட்டிச் சிவபூசை புரியலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனால்இவர் பிள்ளைப்பருவத்துக் கேற்ற திருவிளையாட்டாக மண்ணி ஆற்றிடைக்குறையில் நின்ற ஒரு திருவாத்தி மரநீழ

341ம் பக்கம் பார்க்க



# ஸ்ரீ காளிகாமடு கற்பக விநாயகர் ஆலய வரலாறு

வடக்கின் கண்ணே தேவாரம் பெற்ற திருக்கேதீச்சரச் செழும்பதியும், தெற்கின் கண்ணே திருப்புகழ் பெற்ற கதிர்காமத் திருப்பதியும், கிழக்கின் கண்ணே தேவாரம் பெற்ற தென் கயிலைத் திருகோணமலை வளம்பதியும், மேற்கின் கண்ணே மேன்மை சால் முனீச்சுர வியன்பெரும் பதியும் அமைந்து நாற்புறமும் அருட்காவல் பூண்டு நிற்பதால் நமது ஈழவளநாடு புனிதமுற்றுப் பொலிகின்றது. நாற்புறமும் சூழ்ந்துள்ள கடலரணிலும் பன்மடங்கு வலிமையுள்ள திருவருட் கடலரண் சூழ்ந்துள்ளமையால் ஊழி பெயரினும் நிலை பெயராத உறுதி பெற்று விளங்கும் ஈழ நன்னாடு பொன்னாட்டிலும் உயர்வுடையதாகும்.

இந் நன்னாட்டின் கிழக்குத் திசையிலே அகத்தியர் தாபனமாகிய திருக்கரசை, சிவ பக்தனாகிய இராவணன் கண்ட சப்த தீர்த்தமென்னும் கன்னியாய், வெருகலம்பதி, சிற்றாண்டி, மாமாங்கம், கொக்கட்டிச்சோலை, தில்லைமண்டூர், திருக்கோயில் முதலிய பல தலங்கள் நிலவுஞ் சிறப்பினால் ஈழநாட்டினும் கிழக்கிலங்கை மகிமை பெற்று விளங்குகின்றது. தமிழும், சைவமும் கமழ்கின்ற கிழக்கிலங்கையின் விழுமிய பண்பாடு பழமையும், பெருமையும் வாய்ந்ததாகும்.

உரோம, கிரேக்க நாகரிகங்களிலும் பழமை பெற்ற சைவத்தமிழ் நாகரிகம் சிந்து வெளியிலே சீர்மையுற்றுத் திகழ்ந்தமை உலகறிந்த செய்தியாகும். புனைந்துரையன்று. கரப்பா, மொகஞ்சோதாரோ நகரங்களிற் கண்ட புதைபொருள் ஆராய்ச்சியின் வாயிலாகத் தமிழும், சைவமும் உலகம் போற்றும் உன்னத நிலைக்குள்ளானமை விஞ்ஞான ரீதியிலும் தமிழர் பெற்ற ஒரு தனிப் பெரும் வெற்றியாகும். தமிழர்களும், சைவர்களும் மிகப் பழைய நாகரிகம் பெற்ற ஒரு சாதியினரின் வழித் தோன்றல்கள் என்று சொல்லும்போது அவர்களுக்கு ஒரு பெருமிதம் உண்டா

கின்றது. உலக மக்களின் முன்னிலையிலே தலை நிமிர்ந்து நிற்கும் சக்தியும் அவர்களுக்கு வந்து விடுகின்றது. ஈழ நாட்டுத் தமிழர்கள், சைவர்கள் ஆகிய நமக்கும் இந்தப் பெருமிதமும், சக்தியும் புத்துயிரளித்து நிற்கின்றன.

நமது பழம் பெருமையையும், புத்துணர்ச்சியையும் துணையாகக் கொண்டு முயற்சித்து நமது முன்னோரளித்த அரும் பெரும் செல்வங்களை நாம் அனுபவித்தல் வேண்டும். அவர்களின் சிறந்த நடையினை நாம் அனுசரித்தல் வேண்டும். நமது சமய தாபனங்களைப் பற்றிய உணர்ச்சியும், ஆராய்ச்சியும் நம் உள்ளத்தில் உதித்தல் வேண்டும். திருவருள் வழிநடத்த நமது முன்னோரின் சக்தியை ஆதாரமாகக் கொண்டு நாம் முயன்றால் நமது நாட்டிலுள்ள புராதன தலங்களைப் புனிதமாக வைத்திருக்கவும், பாதுகாக்கவும், புனருத்தாரணம் செய்யவும், நன்றாக நிருவகிக்கவும் வேண்டிய ஆற்றல் நமக்குக் கை கூடும்.

பின் தங்கியுள்ள நாம் நமது அண்மையிலுள்ள திருவருள் ஊற்றுகளைப் பாதுகாவாமலும், அனுபவியாமலும் விட்டு விட்டுப் பேருக்கும் புகழுக்குமாகப் பெரிய திருவருட் பிரவாகங்களை நோக்கித் தொலை தூரத்துக்கு அலையும் மனப்பான்மையைத் தற்காலிகமாக விட்டு விடுதல் வேண்டும். அங்கே பூசை திருவிழாக்களுக்காகப் பெரும் பணம் செலவிடுதலும் நமக்கு வேண்டா. முதல் நமது நாட்டிற் பழுதடைந்து கிடக்கும் ஆலயங்களின் மீது நமது பார்வை விழட்டும். அவற்றைத் திருத்தியமைக்கத் தொண்டு செய்வோம். பின்பு வெளியுலகப் பணியிற் பங்கு கொள்வோம். கிழக்கிலங்கையில் நமது நோக்கம் செல்வதாக. இற்றைக்குத் தொள்ளாயிரம் ஆண்டுகளின் முன்பு நிகழ்ந்ததோர் தெய்வீகக் காட்சி நமது நினைவுக்கு வருகின்றது. அதுவும் நமது கிழக்கிலங்கையிலே, நமக்கு அண்மையிலே நிகழ்ந்த திருவருட் காட்சியாகும்.

வானோங்கிய மரங்களும், மரங்களிற் படர்ந்து மன்றல் கமழும் கொடிகளும், தளிர்த்துப் பூத்துச் செழித்துக் குலுங்கும் செடிகளும் செறிந்து இனிய பொதும்பர்கள் நிறைந்த மாபெருஞ் சோலையொன்று. கொம்பன் சோலையென்பது அதன் பெயர். அதுதான் ஏறுமாவூர், செங்கலடி, கொம்பன்துறை, சிகண்டிகுடி, சந்திவெளி, காளிகா



மடு முதலிய பிரதேசங்களைச் சார்ந்து நீண்டு பரந்து கிடந்தமையால் வன விலங்குகளுக்கும், பறவைக் கூட்டங்களுக்களுக்கும், கவர்ச்சியளிக்கும் இனிய வாசஸ்தலமாக அமைந்திருந்தது. இக் காட்டிலே சர்வாதிகாரி போல உலாவித் திரிகின்றது ஒரு கொம்பன் யானை. நடைமலை போன்றும், மதமலை போன்றும் திரிகின்ற அந்தக் கொம்பன் மேற்குறித்த இடங்கள் தோறும் அலைந்து மக்களை அவலமும் கவலையும் அடையச் செய்து செருக்கித் திரிகின்றது.

மதவெறி கொண்டு அலைந்து திரிந்த இந்தக் கொம்பன் யானை ஒருநாள் திருவருட் குறிப்பினாலே சிகண்டிகுடியை நோக்கி வேகமாக வருகின்றது. அங்கே சிகண்டி முனிவர் என்னும் சித்தர் தவயோகத்திலிருக்கிறார். யானை அவரை நெருங்கி மேலும் வேகமாக வருகின்றது. இந்த யானையின் பிறப்பைத் திருக்குறிப்பால் அறிந்த சிகண்டி முனிவர் ஒரு வெற்றிலையை எடுத்து அதன் முன்னே எறிகின்றார். வெற்றிலை வேல்போல் வடிவெடுத்து யானையின் மத்தகத்தை இரு கூறாகப்பிளக்கின்றது. யானையின் இரு கூறுகளும் மறைய அவற்றினிடையே ஒரு மனிதவடிவம் தோன்றி முனிவரின் பாதங்களில் விழுந்து வணங்க முனிவர் ஆசீர்வதித்து நீ முற்பிறப்பில் ஒரு கந்தருவனாயிருந்தாய். உனது பெயர் ஐராவசு. ஒரு சாபத்தினால் யானையாகப் பிறந்து இக் காட்டில் அலைந்து திரிந்தாய். இன்று என்னைக் கண்டதும் உனது சாபம் நீங்கிப் பழைய வடிவம் பெற்றாய். இனிமேல் நீ நலமே வாழ்க! என்று கூறி முனிவர் அவனுக்கு விடை கொடுக்கின்றார். அவன் மீட்டும் வணங்கியெழுந்து தனது நகரத்துக்குச் செல்கின்றான்.

அக்கொம்பன் யானை திரிந்த கொம்பன் சோலையே கூமாச்சோலையென்றும், கொம்பன் நீர் விளையாடிய கொம்பன்துறையே கொம்மாதுறையென்றும், கொம்பன் ஏறுமாறுகத்திரிந்த ஏறுமாவூரே ஏறாவூர் என்றும் திரிந்து வழங்குகின்றன என்றுபெரியோர்கூறுகின்றார்கள். அன்றியும்சிகண்டிமுனிவர்வாழ்ந்த இடமாகியசிகண்டிகுடியேகாலகதியில் சிற்றாண்டிகுடியாயிற்று என்றும் கூறுகின்றார்கள். இன்று சிற்றாண்டிகுடி சித்திர வேலாயுத சுவாமி கோயிலில் நடக்கின்ற மயிற்கட்டுத் திருவிழா சிகண்டி முனிவரின் ஞாபகமாக நடக்கிறதென்றும் கூறுகின்றார்கள். மயிலுக்குச் சிகண்டியென்னும்

ஒருபெயரும் இருப்பதால் இந்த ஐதிகம் ஆராய்ச்சியாளர்க்கு விருந்தாயமைக.

இந்த அற்புதச் செயல் நிகழ்ந்த சூழலிலே காளிகாமடுத் திருப்பதியென ஒரு பிள்ளையார் கோயில் அமைந்திருக்கின்றது. ஐராவசு எனும் கந்தருவன் யானையாக வாழ்ந்த பிரதேசத்தில் பிரணவ வடிவாகிய யானைமுகக் கடவுளுக்கு மக்கள் ஆலயமெடுத்து இந்த யானையால் இடையூறு நேரிடா வண்ணம் வணங்கி வந்திருக்கலாம் என்று நம்புதற்கு இடமுண்டு. அன்றியும் சிற்றாண்டி குடியில் இளைய பிள்ளையார் சித்திர வேலாயுத சுவாமி கோயில் கொண்டருளியது போல, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த காளிகாமடுப் பகுதியிலே மூத்த பிள்ளையார் கற்பக விநாயகரும் கோயில் கொண்டருளியதும் பொருத்தமாக அமைந்திருக்கிறது, எனவும் பெரியோர்கள் கூறுகின்றனர்.

கொக்கட்டிச் சோலை தான்தோன்றீசுவரர் கோயிலுக்குத் தாந்தாமலைத் திருப்பதியிருப்பது போன்று, சிற்றாண்டிச் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்துக்குக் காளிகாமடுத் திருப்பதியிருப்பது மிகவும் பொருத்தமாகக் காணப்படுகின்றது. எந்த நோக்குடன் பார்த்தாலும் காளிகாமடு கற்பக விநாயகர் ஆலயம் திருவருள் சுரக்கும் தெய்வீக தலமென்பதிலே எள்ளளவும் ஐயமேயில்லை.

இத்தகைய அற்புதம் வாய்ந்த காளிகாமடுத் திருப்பதியானது செங்கலடிச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் வதுளை வீதியிலே $92\frac{1}{2}$ $92\frac{3}{4}$மைல் தூரத்தில் அமைந்துள்ளது. செங்கலடிச் சந்தியால் மேற்கு நோக்கிச் சிறிது தூரம்சென்றதும் வீதியின்மருங்கில் நமது இடப்புறத்தே நிற்கும் வேம்பிலும், அரசிலும் மாறிமாறிப் பாய்ந்து துள்ளிக் குதிக்கின்ற வானரக் கூட்டங்களை அங்கே காணலாம். தெய்வீகப் பிரசாத முண்ணும் பேறுபெற்ற இந்த வானரக் கூட்டங்கள் உறவுகலந்து விளையாடு மிடத்திலே அழகான சிறியதோர் ஆலயம் முதற் காட்சி தருகின்றது. இது ஒரு வைரவர் கோயில். காளிகாமடுக் கற்பக விநாயகர் கோயிலின் திருவாயிலைக் காவல் புரியும் அதிகாரம் பெற்ற வயிரவர் இங்கே நிற்கின்றார். இவரிடம் விடை பெற்றாலொழியக் காளிகாமடுத் திருப்பதியை அடைதல் கூடாது.

கி. பி. 1902ம் ஆண்டளவிலே தான் இவ்வயிரவர் ஆலயம் முதல் முதல் கட்டப்பட்டது. அப்போது ஏறாவூரி



லிருந்த பிரபல வணிகர் திரு. சு. ம. இளையதம்பி என்பவர் கட்டி உபகரித்த ஆலயக் கட்டிடம். கி. பி. 1957ம் ஆண்டு மார்கழி மாதம் 25ந்திகதி ஏற்பட்ட பெருவெள்ளத்தாற் சேதமடையலாயிற்று. பின்னர் 1958ம் ஆண்டு தை மாதம் 24ந்திகதி மீண்டும் அத்திவாரமிடப் பெற்றுப் பொதுமக்களின் உதவியுடன் ஸ்ரீகாளிகாமடு ஆலயபரிபாலன சபைத் தனாதிகாரி திரு. சி. வ. வி. செல்லையா அவர்களின் முயற்சியால் இப்போதுள்ள வைரவர் கோயிற் கட்டடம் பூர்த்தியாகி 1958ம் ஆண்டு ஆடி மாதம் 28ந் திகதி கும்பாபிடேகமும் சிறப்புற நிறைவேறப் பெற்றது. இத் திருப்பணிச் செலவிலே பெருந் தொகைப் பணம் திரு. சி. வ. வி. செல்லையா அவர்களின் காணிக்கையேயாகும்.

இந்தக் காவல் வைரவர் கோயிலிலிருந்து தெற்கு நோக்கி ஒரு செம்மண் வீதி செல்கிறது. இவ் வீதி ஏறக்குறைய 330 யார் நீளமிருக்கும். இவ் வீதி முடியுமிடத்திலே ஒரு மண்மேடு அமைந்துள்ளது. இம் மண் மேட்டில் நின்று தெற்கு முகமாக நோக்கினால், மிக மிக அண்மையிலே காளிகாமடு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம் கண்ணுக்கு இனிதாகக் காட்சியளிக்கும்.

மூன்று புறமுஞ் சூழ்ந்து கிடந்து இயற்கை அரணாகக் காட்சி தருகின்ற இனிய நீரோடை; அதனிடையே அமைந்து கிடக்கும் நீண்டு பரந்த நிலப்பரப்பு; அந்நிலப்பரப்பின்மீது குளிர்ந்த தழைகளையுடைய ஆலுமரசும், மாவும் மருதும், வேம்பும் வில்வமும் விண்ணோங்கியுயர்ந் துமெல்லிலைப் பந்தல் விரித்தாற் போன்ற குளிர் நிழற் கூடல்; இக் கூடலின் நடுவிலே கோயில். இத்தனையும் ஒருங்கே பொருந்திய காளிகாமடுத் திருப்பதியானது ஈழ நாட்டின் திருவரங்கம் போன்று இனிதாக இலங்குங்காட்சி காண்போர்க்குப்பக்தியும், பரவசமும் ஊட்டுகின்றது. அற்புதம் வாய்ந்தது.

இத்திருப்பதியைச் சூழ்ந்துள்ள நீரோடை ஆழமற்றது. மூக்கன்வெளி நீரோடை யென்பது அதன் பெயர். மேட்டு நிலத்திலிருந்து நீரோடையிலிறங்கிக் கரையேறியதும் இயல்பாகவே கழுவப்பட்ட கால்களுடன் நாம் ஆசாரசீலர்களாக ஆலயவீதியிற் பிரவேசிக்கும் பேறு நமக்குக் கிடைக்கின்றது. கால்கள் விரைந்து செல்லக் கற்பக விநாயகர் திரு முன்னிலையடைந்து மெய்ம்மறந்து நிற்கும் பக்தர்குழாத்துடன் நாமும்

ஒன்றாகி விடுகின்றோம். ஆலயமோ சிறிது. அருளோ பெரிது. பிரணவ சொரூபியாகிய பிள்ளையாருக்கு ஆலயமமைக்க யாரால் முடியும்.

கிழக்கிலங்கையிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையே யமைந்து விசேடம் பெற்ற பல தலங்களுக்குள்ளே காளிகாமடுத் திருப்பதியும் ஒன்றாகும். அடர்ந்த வனமாகக் கிடந்தஇந்தக் காளிகாமடுப் பிரதேசத்தினூடாகச் செல்லும் 'தாவளவீதி' என்கின்ற ஒற்றடிப்பாதை வழியாக அக்காலத்திற் பிரயாணிகள் வதுளைக்குப் போக்குவரவு செய்வது வழக்கமாகும் கி. பி. 1800ம் ஆண்டு தொடக்கம் இவ் வழக்கம் இருந்து வந்தது. இக்காலத்திலே இதற்கு அயற் கிராமங்களிலுள்ள மக்கள் காடு வெட்டிப் பூமிதிருத்திக் கமஞ் செய்யும் முயற்சியில் ஈடுபட்டபோது இப்போது ஆலயமிருக்கும் மேட்டுப்பூமியில் வன்னித்தம்பிரானையும், காளிமாதேவியையும் வழிபட்டு வந்தார்கள். பிரயாணிகளும் இவ் வழிபாட்டிற் கலந்துகொள்வதுண்டு. ஆயினும், அப்போது குறிப்பிடத் தக்க கோயில் எதுவும் கட்டியதாகத் தெரியவில்லை.

கி. பி. 1870ம் ஆண்டளவிலேதான் ஒற்றடிப்பாதை பகிரங்க பாதையாகத் திருத்தியமைக்கும் வேலை தொடங்கியது. பாதையமைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த 'பயனீயர்கள்' என்போர்க்குத் தலைவராயிருந்த செங்கலடி ஆறுமுகம் முருகப்பர் அவிள்தார் முதலி என்பவரே காளிகாமடு ஆலயத்தை முதல் முதலாகக் கட்டுவித்தவர். செங்கலடியைச்சேர்ந்த மானிடலர் என்பவரும், நம்பியார்குமாரவேலு என்பவரும் தொடக்கத்தில் பூசகர்களாயிருந்தார்கள். இப்போது செங்கலடியிலே பழுத்த மருந்துமாமரம் போல் திகழ்கின்ற சித்த வைத்தியர் கிருஷ்ணபிள்ளைச்சாமியார் அவர்கள் ஆறுமுகம் முருகப்பர் அவிள்தார்முதலி என்பவரது புதல்வரேயென்பது இங்கே குறிப்பிடத் தக்கதாம்.

காளிகாமடு என்னும் இத்திருப்பதிக்கும், காளிதேவிக்குமுள்ள தொடர்புபற்றி இப்போது ஒன்றுஞ் சொல்வதற்கு ஆதாரம் யாதும் காணப்படவில்லை. காளிகம் என்கின்ற மணித்தக்காளி இப்பகுதியின் பக்கத்தே காணப்படுவது கொண்டு காளிகாமடு என்னும் பெயர் இந்த மருந்துப் பூண்டினால் வந்திருக்கலாம் எனச்சிலர் அபிப்பிராயப் படுகின்றார்



கள். ஆராய்ச்சியாளரிடம் இதனை விட்டு விடுதல் நல்லதாகும்.

1878ம் ஆண்டு தொடக்கம் அர்ச்சகராயிருந்த குமாரவேலு என்பவர் 1892ம் ஆண்டிலே காலமாகி விட்டார். அதன்பின் குமாரவேலு மகன் சின்னப்பு என்பார் அர்ச்சகரானார். சின்னப்புவின் காலத்திற்குப் பின் மானிடலரின் மைத்துனர் மூத்ததம்பி என்பார் பூசகரானார். இந்நிலையிலே, முன்பு1902ம் ஆண்டில் வைரவர் கோயிலைக் கட்டுவித்த ஏறாவூர் திரு. சு. ம. இளையதம்பி என்பவர் காளிகாமடு ஆலயத்தின் பூசை திருவிழா நிகழ்ச்சிகளைப் பிரபலப் படுத்த முயற்சிக்கலானார். அயற் கிராமங்களிலுள்ள மக்களின் ஒத்துழைப்போடு வேல்திருவிழா தைப்பூசத் திருவிழா, ஆகிய உற்சவங்களை ஏற்படுத்தி இனிது நடத்தி வந்தார். இவர் காலத்தின்பின் இவரின் மூத்த மகன் இரத்தினம் என்பார் இக் கோயிற் திருப்பணிகளைச் செல்வனே நடத்தலாயினர்.

இதன்பின், 1935ம் ஆண்டளவில் ஆலய நிருவாகத்தில் புதியதோர் அபிவிருத்தியுண்டாயிற்று. அப்போது ஏறாவூரிற் பிரபலம் பெற்றிருந்த கொஸ்தாப்பர் சு. ம. சிதம்பரப்பிள்ளை அவர்களின் மேற்பார்வையின் கீழ் மேசிலார் சரவணமுத்து என்பவரைக் கொண்டு ஆலயத்தின் முன் மண்டபங்கள் இரண்டையும் மடைப்பள்ளியையும் கட்டுவித்துத் திருப்பணியை நன்கு நிறைவேற்றி வைத்தார். மட்டுநகர் பிரமுகரும், அப்போது நீர்ப்பாசன அதிகாரியாகக் கடமையாற்றியவரும் சிவதொண்டருமாகிய திரு. பெ. ஏரம்பமூர்த்தி என்பாரும் இத்திருப்பணியில் பன்குடாவெளி திரு. வ. வி. சீனித்தம்பி, செங்கலடி திரு. வ. வி. கதிர்காமத்தம்பி ஆகியோரும், இப்பகுதி விவசாயிகளும் காட்டிய ஒத்தாசை இங்கே குறிப்பிடத் தக்கதாகும். அன்றியும் இத்திருப்பணிக்கு வேண்டிய மரங்களைத்தந்துதவிய செங்கலடி திருமதி. வல்லிபுரம் தங்கம்மையாரது தாராளத் தன்மை இப்பகுதித் தனவந்தர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகக் கொள்ளுதற்கு உரியது.

1939ம் ஆண்டு கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றுப் பொதுமக்களாற் பரிபாலிக்கப் பட்டுவந்த இவ்வாலயத்தின் பூசகராக கொக்கட்டிச் சோலைப் பகுதியைச் சேர்ந்த திரு. கந்தையா என்பவர் அப்போது சேவை செய்து வந்தார்.

கற்பக விநாயகரின் திருவருள் போல இவ்வாலயமும் ஒரு பொதுச் சொத்தேயாம். 1945ம்ஆண்டு தொடக்கம் 1949ம். ஆண்டு முடியு மட்டும் இவ்வாலய நிருவாகம் பன்குடாவெளி கொடுவாமடு, கொம்மாதுறை, வந்தாறுமூலை, செங்கலடி ஏறுவூர் 4ம் 5ம் குறிச்சி, தளவாய், குடியிருப்பு, மயிலம்பா வெளி, புளியந்தீவு ஆகிய ஊர்ச் சைவப் பொதுமக்களாற் தெரிவு செய்யப்பட்ட ஒரு பரிபாலன சபையினுற் செவ்வனே நடைபெற்று வந்தது. 1950ம் ஆண்டிலிருந்து உன்னிச்சை, கரடியனாறு, வேப்பவெட்டுவான், ஆகிய கிராமங்களும் நிரு வாகத்திற் பங்கு கொண்டன. 1960ம் ஆண்டு தைமாதம் 31ந்திகதி வரையும் இந்த நடைமுறை பழைய வழக்கத்தைத் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

1960ம்ஆண்டு தைமாதம் 31ந்தேதியன்று மேற்குறித்த ஊர்ப் பொது மக்கள் கூடிய ஒரு மகா சபை ஆலய வீதி யிற் கூடிச் செய்த தீர்மானத்துக் கமைய 6–6–60ல் ஆலய நிருவாகம் பற்றி ஒரு உறுதி சாதனம் நிறைவேற்றப்பட் டது. பிரசித்த நொத்தாரிசு திரு. சா. கந்தப்பா அவர் களால் 3419ம் இலக்கத்தில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட சாதனத்தின் பிரதிகள் தருமக் கமிஷனர் காரியாலயம் (Public Trust), மட்டுநகர்ப் பொதுநூல் நிலையம், (Public Library) ஆகிய தாபனங்களிலும் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளன.

இத் திருப்பதியில் ஆண்டுதோறும் திருவிழா நடத் தும் ஒழுங்கினைப் பரிபாலன சபையார் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார்கள். கதிர்காமத் தீர்த்தத்துக்கு நாலு நாள் முந்தி இங்குள்ள வைரவர் கோயிலிற் கொடியேற் றம் நடக்கும். அன்று இதனைத் தொடர்ந்து கற்பகவிநா யகப் பெருமானுக்கு அபிடேக நைவேத்திய ஆராதனை நிகழும். பின்னர் மூன்றும் நாள் வந்தாறுமூலை விஷ்ணு வாலயத்தில் முன்னேற்பாட்டுடன் வைத்து எழுந்தருளப் பண்ணிய சக்திவேல் ஏறுவூர் வரையுள்ள எல்லா ஆலயங் களையும் தரிசித்து மக்கள் பக்தி பரவசமாகப் பணிந்து நிற்க ஊர்வலமாகக் காளிகா மடுப்பதியை வந்தடையும். வந்து எழுந்தருளியதும் விநாயகப் பெருமானுக்கு அபிஷேக பூசையும் திருவிழாவும் நடைபெறும்.

அடுத்த நாள் கதிர்காம தீர்த்த உற்சவத்துடன், தீர்த்த உற்சவம் நடந்தேறும். தீர்த்தம் முடிந்ததும் திரு



ஊஞ்சலும், அன்னதானமும் சிறப்பாக நடைபெறும். இந்த உற்சவ முறை 1946ம் ஆண்டு தொடக்கம் நடைமுறை யிலிருந்து வருகின்றது. ஆண்டு தோறும் இத் திருவிழா வைபவத்திற் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு சைவ மக்களின் கூட்டுறவும் நம்பிக்கையும் வளரத் திருவ ருள் பொலியச் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார் கள்.

மட்டக்களப்பு–வதுளை வீதியாகச் செல்லும் பிரயா ணிகள் சாதி சமய வேறுபாடின்றி இவ்வாலய வீதியிலே தரித்து நின்று கற்பூரம் கொளுத்தித் தேங்காயுடைத்துக் கும்பிட்டு வணங்கிச் செல்லும் காட்சியினை எப்போதும் காணலாம். இவ்வாலயத்துக்குப் பொருள் வருவாய் சிறிது; அருள் வருவாய் பெரிது. எதிர்காலத்தில் அருள் போற் பொருளும் பொலிந்து கற்பக விநாயகர் திருக்கோயில் நீடுழி வாழ்க வெனக் கற்பக விநாயகர் பெருமானை வாழ்த்தி வணங்குவோமாக.

"நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே".

---

## யோகம்

யோகம் என்பது இதுவே, புலன்களை அடக்கி ஆள்வதே அது.

— உபநிடதம்

## உடம்பு

உனக்கு உடம்பு தந்திருப்பது உன்னுடைய நன்மைக்காக மட் டும் அன்று.

— எபிரேயமதம்

---

# சரணடைந்தேன்!

(சி. பொன்னுத்தம்பி)

★

ஆடலெலலாம் ஆடிஉல கரங்கினிலே சலித்தேன்
ஆனாலும் எனதுள்ளம் அமைதி கொள்ளவில்லை!
பீடுயர்நின் பொற்கழலின் பேரமுதம் உண்ணப்
பெருகிவரும் பேரன்பில் உருகு தெனதுள்ளம்!

★

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும்
மாமோகப் பெருங்கடலில் மூழ்கி யலுத் தலுத்தே
என்னாசைத் தின வின்னும் தெளியாது கதறும்,
எளியேனைக் கரையேற்ற ஒருவழியு மிலையோ?

★

பட்டதுயர் இனிப்போதும்; பாவிமனம் சலித்தேன்
பாடுதற்கும் முடியாத பாழமைதி யுற்றேன்;
வெட்டவெளி தனில்பட்ட மரமாகித் தவித்தேன்;
வேறுகதி உனையன்றி எனக்கேதும் இல்லை!

★

நிலையான பொருளொன்றும் யான் காணவில்லை;
நினையன்றி எனக்கிங்கு நிலையேதும் இல்லை;
வலைபட்ட மீன்போல துயர் பட்டலுத் தே
மாளாது நின்னடியே சரணென்றடைந்தேன்!

★



# அப்பர் அறிவாலும் உணர்வாலும் இறைவனைக் காணும் விதம்

(ஏ. பாக்கியமூர்த்தி — மட்டுநகர்)

அறிவியல் ஆகாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இக்காலத்தில் ஆண்டவன் இருக்கிறாரோ இல்லையோ என்று கேலி செய்யும் கூட்டமே அதிகம். ஆத்மீகம் பேசுபவர்களை அரைப் பயித்தியகாரர்கள் என்று கூட்டம் கூடிக் கூக்குரல் போடும் கும்பலே அதிகம். ஏன்? மூளை வளர்ந்ததே தவிர மக்களின் இதயம் வளரவில்லை. மனப்பான்மை குறுகிவிட்டது. இதயமில்லா அறிவால் உலகம் அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. சுருங்கச் சொன்னால் மக்களின் அறிவியல் கூடி உணர்வியல் குறைந்து விட்டதெனலாம்.

சுவாமி விவேகானந்தர் தமது அறிவியலால் இவ்வுலகியலை ஆராய்ந்து ஏதோ ஒரு மாபெரும் சக்தி நம்மை ஆட்டிப் படைப்பதை அறிந்தார். அவ்வாறு அறிந்தவர் அதைக் கண்டறிய இராமகிருஷ்ணரை விரைந்தார். தம் உணர்வியலால் இறைவனை எத்தனையோ வடிவில் கண்டு இன்புற்ற இராமகிருஷ்ணர், தம் உணர்வியலால் இறைவனைக் காட்டினார். அறிவும் உணர்வும் சேரவே இறைவன் தன் திருவுருவத்தினைக் காட்டினான். எனவே இறைவன் அறிவால் அறியப்பட்டு உணர்வால் அனுபவிக்கப் படும் ஓர் பேரின்பம் என்பது பெறப்படும்.

நம் சைவசமய குரவர்களிலே ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனார் இறைவனை அறிவியலாலும் உணர்வியலாலும் ஆராயும் அற்புதம் தான் என்னே. அவர் பல சமய உண்மைகளையும் ஆராய்ந்தவர். சைவராகப் பிறந்து சமணராகமாறி மீண்டும் தான் பிறந்த சமயமே நல்வழி காட்டும் சமயமெனத் துணிந்து, அதன் வழி நின்று வீடுபேறு பெற்ற பெருந்தகை. அன்னார் எவ்வகையில் இறைவனைக் காண்கிறார் என்பதைச் சிறிது ஆராய்வாம்.

கடவுள் உருவமற்றவர், நிறமற்றவர், குணமற்றவர், அவரை நாம் காணமுடியாது; என்பது எல்லோரும் ஒப்ப ஏற்றுக் கொண்ட முடிவு. எனினும் நம் சமயம் வடிவற்ற

இறைவனுக்குப் பல பல வடிவங்களைக் கொடுத்திருக்கிறது. அவை மனித வடிவத்திலேயே இருக்கின்றன. "ஓர் எருமைமாடு கடவுளைப் பற்றிச் சிந்திக்குமாகில் நிச்சயமாக தன்னினத்திலுள்ள ஓர் பெரிய மாட்டைப் போல் இருப்பார் எனவே எண்ணும்" என்று சுவாமி விவேகானந்தர் ஓர் இடத்தில் கூறுகிறார். எனவே மக்களினம் கடவுளைப் பற்றிச் சிந்திக்கும் போது நம்மைப்போன்ற அமைப்பிலும் நம்மிலும் மேலான குணநலங்களையும் உடையவராக எண்ணுவதில் வியப்பொன்றும் இல்லையே.

சைவம் இறைவனை மாதொரு பாகனாகவே காண்கிறது. இதற்குப் பல அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் உள்ளன. சமயகுரவர்களுள் மூத்தவராகிய மாணிக்கவாசகப் பெருமான்,

"கண்ணால் யானும் கண்டேன் காண்க" எனவும்
"புவனியில் சேவடி தீண்டினன் காண்க" எனவும்
"குவளைக் கண்ணி கூறன் காண்க." எனவும்

எவ்வளவு ஆணித்தரமாக மொழிகின்றார்.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி
ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவரே"

எனத் துணிகின்றது மெய்கண்ட சாஸ்திரம். இந்த உண்மையை நம் முன்னோர் உணர்வையும் அறிவையும் ஒன்றுபடுத்திக் கண்டறிந்தனர்.

அறிவியல் துறையில் நின்று அப்பர் பெருமான் இறைவனை ஆராயும் தன்மையைப் பாருங்கள்.

"மைபடிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னின் அல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவனல்லன்
ஓர் ஊரன் அல்லன் ஓர் உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே."

என்று அறிவியல் பேசுகின்றார்.



கடவுளை உணர்வினால் அறிந்தவர்கள் மைபடிந்த கண்ணாளோடு நீண்ட சடாபாரத்தை உடையவனாய் கச்சிமயானத்தில் காட்சி கொடுக்கிறான் என்று கூறுகிறார்களேயல்லாமல், அவன் தனக்கு ஒப்பாக ஒருவனை உடையவனல்லன்; அவன் ஏகன்; அநேகன்; ஓர் ஊரில் இருப்பவனல்லன்; எங்கும் உள்ளான்; அவன் உவமிக்க முடியாதவன். எனினும் அவன் "வேயுறு தோளி பங்கனாக" இருக்கின்றான்; "சுரிகுழற் பணைமுலை மடந்தை பாதியாக" இருக்கின்றான்; "வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப் பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்" இருக்கின்றான், என்றெல்லாம் அவன் அடியார்கள் பாடுகின்றார்கள். அவ்வடியார்கள் "அவனருளாலே அவன் தாள் வணங்கி", "அவனருளே கண்ணாகக் கண்டு", "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன்" என்றெல்லாம் தாங்கள் கண்ட கோலத்தை ஆயிரம் ஆயிரம் பாக்களால் பாடி மகிழ்ந்தனர்.

"சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை"

என நாவுக்கரசர் கூறும் அறிவியல் தத்துவம் அடியார்களின் சொன் மாலையையும் கடந்து நின்றவன் இறைவன் என்பதை புலப்படுத்தா நிற்கின்றது.

இறைவன் தானே யாதுமாகி நிற்கின்றான். விறகிலே தீ மறைந்து நிற்கிறது. இரண்டு மரக்கட்டைகளை ஒன்றோடொன்று உராயும்போது தீப்பொறிபறக்கின்றது. பாலிலே நெய் மறைந்து கிடக்கின்றது. பாலைக் கடையும்போது நெய் தோன்றுகின்றது. மாணிக்கக் கல்லைச் சாணையில் போட்டுக் கடையும் போதுதான் அதில் இருந்து ஒளி பிறக்கின்றது. இவற்றைப் போன்றே இறைவன் நம் அகத்திலும், புறத்திலும் மறைந்து கிடக்கின்றான். நாம் ஓர் பாத்திரமானால் நம்முள் இறைவனின் அருள் என்னும் பால் நிறைந்து கிடக்கின்றது. அந்தப் பாலைக் கடைய உறவுஎன்னும் கோலை மத்தாகக் கொள்ள வேண்டும். அதாவது நமக்கும் இறைவனுக்கும்இடையில் ஓர்உறவு முறையை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். அவன் ஆண்டான் நாம் அடிமை என்னும் உறவோ, அவன் தாய்தந்தையர் நாம் மக்கள் என்னும் உறவோ இறைவன் மேல் காதல் கொண்டு கணவன் மனைவி என்னும் உறவோ அல்லது தோழமை உறவோ, ஏதாவது ஓர் வகையில் நமக்கும் இறைவனுக்கும் இடையில் தொடர்பு அவசியம்

வேண்டப்படுவதொன்று. இந்த உறவுகோலை உணர்வு என்னும் கயிற்றால் கடைய வேண்டும். அவ்வாறு உணர்வுக் கயிற்றாற் கடையும்போது பாலில் நெய் தோன்றுவது போல் இறைவன் தோன்றுவான். இந்த அரும்பெரும் உண்மையை அப்பர்,

''விறகில் தீயினன் பாலிற்படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே''

என்று கூறுவதோடல்லாமல் ''எங்கும் ஈசன் என்னாதவர்க்கில்லையே'' என்பதை வலியுறுத்துவான் வேண்டி,

''மெய்த்தவன் காண் மெய்த்தவத்தில் நிற்பார்க்கெல்லாம்
விருப்பிலா இரும்பு மன வினையர்க் கென்றும்
பொய்த்தவன் காண்........''

என இடித்துரைக்கின்றார்.

இனி அப்பர் பெருமான் உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுகவாங்கிக் கடைந்ததால் கண்ட காட்சி தான் என்னே? இதோ அவரே கூறுகின்றார் கேண்மின்.

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மானிலத்தே"

ஆம். இக்காட்சியைக் காண்பதற்கு நிச்சயமாக மனித்தப் பிறவியால்தான்முடியும். வேறு எந்தப் பிறவியிலும் முடியாது. ''இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ''? பிறவியின் பேற்றை அடைய விரைமின்கள்.

அவன் முக்கனியின் சாறோ அல்லது பாற்கடலைக் கடைந்தெடுத்த அமுதமோ எனவும், பிரமன் மால் அடிமுடி தேடி



அறியாத பேரயிரம்பரவி வானோர்ஏத்தும் பெம்மான் பெருந்துறையான் திருவாதவூரடிகளுக்கு நேரிலே வந்து காட்சி கொடுத்த விந்தையை

"அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியா
இதுஅவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டிங் கெழுந்தருளும்
........... .. .. ........''

எனவரும் திருப்பள்ளியெழுச்சிச் செய்யுளில் ''இதுஅவன் திருவுரு இவன் அவன் எனவே'' தாம் இறைவனை அடையாளம் கண்டு கொண்டநுட்பத்தை விளக்குவதையும் காண்மின்கள்.

அறிவியலிலே உருவமற்ற இறைவன் உணர்வியலிலே உருப்பெற்று அன்பர்களுக்குக் காட்சிகொடுக்கிறான் என்னும் உண்மையை சைவசமயம் வலியுறுத்துவதுபோல் வேறு எந்தச் சமயமும் வலியுறுத்தவில்லை என்பது தெளிவு.

''பிறவாயாக்கைப் பெரியோன்'' ஆகிய சிவன் பிறந்ததாகப் பல கற்பனைக் கதைகள் கூறப்படுகின்றன. அவை தமிழர் தம் சமயத்திற்கு ஒவ்வாதவை. சிவனுக்கும் உமைக்கும் பிறப்புகள் பல கற்பிக்கும் கதைகள் ஆரியரால் தமிழ் மக்களிடையே புகுத்தப்பட்டு இன்று வேரூன்றிவிட்டன. இதைக் கண்ணுற்ற நம் சமய குரவர்கள் பாமர மக்கள் சமயத்தில் நம்பிக்கை இழக்காவண்ணம் அக்கதைகளை தமது தேவார திருவாசகங்களில் சேர்த்துப் பாடினரேயன்றி அவர்கள் அக்கதைகளை நம்பினரல்லர். -

எனினும் அம் முழுமுதற் பெரும் பொருளாகிய சிவபெருமான் பலப்பல திருமேனிகளைத் தாங்கி அன்பர் மாட்டு பல திருவிளையாடல்களைச் செய்துள்ளான். அத்திருமேனிகளைத் தோற்றுவிப்பவரும் அவரே. அவை பல அரும் செயல்களுக்காகத் தோன்றி பின் ஒடுங்கிக் கொள்கின்றன. இவ்வாறு இறைவன் தான் வேண்டியவாறு உருக்கொண்டு பின் அவற்றை ஒடுக்கிக் கொள்ளுதல் சைவசித்தாந்தத்திற்கு ஒப்ப முடிந்த முடிவு. சிவனும் உமையும் இவ்வுலகிலே ஓர்ஆணுக்கும் பெண்ணுக்கும் மகனாகவோ அல்லது மகளாகவோ பிறந்தார்கள் என்று கூறும் பொய்க்கதைகள் நம் சமயத்திற்குப் பொருந்தாது. உதாரணமாக,

"கேட்டாரும் அறியாதான் கேடொன்றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாம் கேட்டான்'' என்று மணிவாசகரும்

''பிறப்பிலி இறப்பிலி'' என்று நாவுக்கரசரும்

''தாயவளாய்த் தந்தையாகிச் சாதல் பிறத்தல் இன்றி'' என்று சுந்தரரும்

''பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' என்று அனுபூதிச் செல்வரும் கூறுவதை உய்த்துணர்மின்கள்.

இன்று நம்சைவநன்மக்கள் பிறந்து இறக்கும் பெரியோர்களையும் காப்பியங்களின் கதாநாயகிகளையும், சிற்றுயிர்களையும், சிறுதேவதைகளையும் கடவுளென வணங்கி கோயில்களில் வைத்துப் பூசித்து சிவலிங்கத் திருமேனிக்குச் செய்யும் தீபாராதனைகளையும் பூசை, மற்றுமுண்டான வழிபாடுகளையும் செய்துவருகின்றனர். இப்படிச் செய்வது சைவத்திற்கு பெரும் இழுக்கான ஒன்று.

''தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்
யாதும் ஐயுற வில்லையே''

என்னும் சுந்தரர் தேவாரத்தில் சைவசமயத்தின் உண்மை நிலை தொனிப்பதை சற்று ஆராய்ந்து பாருங்கள்.

இதுவரை கூறியவற்றால் நாவுக்கரசர் நம்மினத்தவரை ஆற்றுப்படுத்தும் விதத்தைச் சிறிது ஆராய்ந்தோம். சீனி இனிக்கும் என்பதை அறிவால் அறியலாம். இனிமை எப்படிப்பட்டது என்பதைச் சுவைத்தலால் உண்டாகும் உணர்வினால்தான் கூறமுடியும். எனவே இறைவனை அறிய அறிவும் உணர்வும் ஒருமித்துத் தொழிற்பட வேண்டும். இதன் அவசியத்தை சைவத்தில் தோன்றி சமணத்திற்கு மாறி



## ஆனினம் மேய்த்து......

324ம் பக்கத் தொடர்ச்சி

வில் மண்ணினால் ஒரு சிவலிங்கத்தை அமைத்தார். மண்ணினாலே அதற்கு ஆலயமும் கோபுரமும் மதிலும் வகுத்தார். ஆத்திப்பூவுந் தளிரும் பிற பூக்களுங் கொய்து மாலை பல கட்டினார். பசுக்களின் முலைகளை இவர் தீண்ட அவை கனைத்துப் பால் சொரிந்தன. அதனைப் புதிய மண்குடம் நிரம்ப எடுத்து வந்து அந்தச் சிவலிங்கத்தை அருச்சித்துத் பாற்திரு முழுக்காட்டினார், மற்றைய பூசனைப் பொருள்களை மனோ பாவனையால் இருப்பதாகப் பாவித்துப் பூசனை புரிந்தார். இங்ஙனம் பல நாட்கள் தொடர்ந்து பத்தியுடன் பூசனை நிகழ்ந்தது.

''மீள மீள இவ்வண்ணம்வெண்பால் சொரிமஞ் சன
மாட்ட
ஆள வுடையார் தம்முடைய அன்பர் அன்பின் பாலுள்
ளதாய்
மூள அமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றச் சூழ
கோள மதனில் உள்நிறைந்த குறித்த பூசை கொள்
கின்றார்''

இதனைக் கண்ணுற்ற ஒருவன் பசுவுடைய அந்தணாளருக்குப் பிள்ளையார் திருவிளையாடலை எடுத்துக் கூறினான். இதனைக் கேட்ட ஆவுடையார் அனைவரும் ஒன்று கூடி எச்சதத்தனை அழைத்தனர். அவனது முன்னிலையிற் சீறிச் சினந்தனர். அவனுடைய மகன் தமக்குச் செய்யுந் தீங்கினை எடுத்துக் கூறிப் 'பிள்ளையைப்பார் பிள்ளையை; பிராமணப் பிள்ளை எங்கள் ஆவுதிக்குச் சுரக்கும் பாலையெல்லாங் கறந்து அவமாக மண்ணிநதி மணலிற் சொரிகின்றான் பிள்ளை. இது அறமாமோ? என்றுஉரப்பிக்கூறினர். ஐயோ! பாவம் இதனைக்

---

முன்பக்கத் தொடர்ச்சி

மீண்டும் சைவத்திலேயே முத்தியடைந்த நம் முதுபெரும் தலைவர் திருநாவுக்கரசுநாயனார் தாம் அருளிப் போந்த தேவாரத் திருப்பதிகங்களில் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். அதைப் பாடி தமிழ்கூறும் நல்லுலகம் பயனடைவதாகட்டும்.

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

கேட்ட எச்சதத்தன் அச்சத்தால் நடுங்கினான். 'பெரியோர்களே! சிறுவன் மறச் செயலை இதுவரையும் நான் அறிந்திலேன். இதற்கு முன்பு நிகழ்ந்த பிழையைப் பொறுத்தருளுங்கள். இனிமேல் இந்தப் பிழை நிகழாதவாறு பார்த்துக் கொள்கிறேன்; எனக் கூறித் தலைவணங்கி அஞ்சலி செய்து நின்றான். இதனைக் கேட்ட அந்தணாளர் தாங் கொண்ட சீற்றந்தணிந்து 'சரி, ஆகட்டும், பார்ப்போம்; என்றுகூறி அவ்விடம் விட்டு அகன்றனர். அன்று இரவு கழிந்த பின்பு எச்சதத்தன் தனது மகனுக்கு எதுவும் அறிவியாது காலையில் ஆனினம் மேய்க்கும் இடத்துக்கு மறைந்து சென்றான். சென்ற அவன் ஒரு குராமரத்து மறைவாகஏறி இருந்து மகன் செயலைக் கரிசனையாகப் பார்த்தான். விசாரசருமன் மண்ணிநதிஆடி அனுட்டானம் முடித்தான். மலர் கொய்தான். பால் கறந்து திருமுழுக்காட்டப் புகுந்தான். இதனைக்கண்ட எச்சதத்தன் கண்கள் கோபத்தாற் சிவந்தன. விரைந்து குராவை விட்டு இறங்கினான். ஒரு தடியைக் கரத்தேந்தியபடி மகன் அண்டை வந்து அவனுக்கு முதுகில் கைசலிக்க அடித்தான். அவனை வைதான். சிவ பூசையில் மனத்தைப் பறிகொடுத்த விசாரசருமருக்கு இவை ஒன்றும் உறைக்கவில்லை. இதனைக்கண்ட எச்சதத்தனுக்கு வன் சினமுண்டாயிற்று. அதனாற் திருமஞ்சனத்துக்கு வைத்திருந்த பாற்குடத்தைக் காலாற் தட்டிச் சரித்துச் சிந்தினான். இதனைக் கண்ணுற்ற விசார சருமருக்குக் கோபங் கோபமாக வந்தது. அவர் தம்மை மறந்து வீராவேசத்தால் பக்கத்தே கிடந்த ஒரு கோலை எடுத்தார். திருவருளால் அந்தக் கோல் மழுவாயுதமாகமாறிற்று. அதனாற்தந்தைஎச்சதத்தனதுகால்கள்அறஎறிந்தார். அலறி எச்சதத்தன் வீழ்ந்தான். சிவபக்தி நிரம்பிய சிறுவனாரோ பழையபடிதொடர்ந்து தமது சிவார்ச்சனையை நடத்தினார். என்னே! இவரின் சிவபத்தி இருந்தவாறு? இதனைக் கண்ணுற்ற சிவபிரான் உமாதேவியாரோடு வெள்ளை எருதேறி அந்தணச் சிறுவர் முன்பு வந்து தோற்றினார். இதுகண்டு பத்தி மிகுந்த பாலகர் மெய்மயிர் சிலிர்த்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்து அவரது திருப்பாதங்களில் வீழ்ந்து இறைஞ்சினார். இறையவன் அந்தத் திருக்குமாரரைத்தூக்கி நிறுத்தித் தமது திருச்சடாபாரத்து அணிந்துள்ள திருக்கொன்றை மாலையை எடுத்துச் சூட்டினார். அகமகிழ்வுடன் அணைத்தார். உச்சிமோந்து உவப்புற்றார். பிள்ளையே! இனிநாம் உண்ட கலமும், உடுத்த உடுப்பும் சூடியமாலையும், மலர்களும் எல்லாம் உமக்கே உரியன.



சண்டீசன் என்னும் பதத்தை உமது தலையாய பத்தியைக் கண்டு உவப்புடன்தந்தோம். உமக்கு இனி நாமே தந்தையும் ஆவோம்' என்று திருவாய் மலர்ந்தருளினார். இதனைக் கேட்டுமண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் ஆனந்தமிகுதியாற் பேராரவாரஞ் செய்தனர். எச்சதத்தனுஞ் சிவலோகத்தை அடைந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றான். ''அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிபனாக்கி அனைத்துநாம் உண்டகலமும், உடுப்பனவும் சூடுவனவும் உமக்காகச், சண்டீசனுமாம் பதந்தந்தோம் என்றங்கு அவர் பொற்தடமுடிக்குத், துண்ட மதிசேர்சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்.''

இந்தச் சண்டீசரே திருக்கோயில் தரிசனஞ் செய்வோருக்கும் சிவபூசை புரிவோருக்கும் சிவனருளைக் கொடுக்கும் அதிகாரம் உடையவராவர். இந்தச் சண்டேசுரரை வழிபடா இடத்து ஆலய தரிசனத்தாலும், சிவபூசையாலும் நமக்கு ஒரு பயனும் ஏற்படாது. ஆதலால் திருக்கோயில் பூசை தரிசன இறுதியில், சிவபூசை முடிவில், சண்டேசுரர் திருமுன்னிலைக்கு நாமெலாஞ் சென்று, ஆலயவழிபாட்டுப் பலனைப், பூசைப்பேற்றை அருளுமாறு மும்முறை கைகொட்டி வேண்டி இகபரத்து இன்புறுவோமாக.

"சண்டனையர்ச் சித்தவரே சம்புவையர்ச் சித்தபலம்
கொண்டிடுவர் மற்றையர் கொள்ளார்.''

---

## இன்பம்

கொடுத்தேனே என்னைக் கொடுத்தவுடன் இன்பம்
மடுத்தேனே நீடுழி வாழ்ந்தே—அடுத்தேனே
பெற்றேனே பெற்றுப் பிழைத்தேனே சன்மவல்லல்
இற்றேனே ஏழை அடியேன்.

— தாயுமானவர்.

அறநெறி அடைந்து விட்டாய், பகைமையை ஒழித்து விட்டாய், இன்பத்தைக் கண்டு விட்டாய்.

- வேதம்.

# ஸ்ரீ காளிகாமடு கற்பக விநாயகர் ஊஞ்சல்

(மட்டக்களப்பு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
அவர்கள் இயற்றியது)

## கொச்சகக் கலிப்பா

1 உத்தமமாம் பக்தி விசுவாசம் காலாகச்
சித்தமெனும் விட்டம் சேர்த்தியனு தினமும்
புத்திகயிறுயுன் மெய்யடியார் நன்கமைக்கும்
சுத்தமன மாம்பலகை மீது மகிழ்ந் தேறிச்
சித்தி புத்தி தந்தருளுந் தேவே உலகுக்கோர்
கர்த்தனே சீர்காளி காமடுவிற் கற்பகமே
வித்தகஞ்சேர் வல்லபையோ டாடுக பொன்னூஞ்சல்
விக்கினங்கள் தீர்த்தருளி யாடுக பொன்னூஞ்சல்.

(1. பக்தியும் விசுவாசமும் இரு கால்கள் 2. சித்தம் விட்டம் 3. புத்தி - கயிறு 4. மனம் - பலகை. இது நித்திய வூஞ்சல்.

2 தந்தையார் கோயில் தருமகர்த்தா வானமுதல்
மைந்தனே மூஷிகத்தை வாகனமாக் கொண்டெமது
சிந்தைசேர் தீயபுத்தி யெல்லாம் சிதைந் தொழிய
வந்தாயெம் வாழ்வில் வருமிடர்கள் தீர்ப்போனே
எந்தையே சாதிமத மெல்லாங் கடந்து வரும்
தந்தாய் திருக் காளி காமடுவிற் சாற்கதியே
கொந்தார் குளிர் நிழற்கீழாடுக பொன்னூஞ்சல்
குறைநீக்கி யாண்டெம்மை யாடுக பொன்னூஞ்சல்.

3 மூவுலகுந் தோன்றுதற்கு முன்னுகு (1)மோரெழுத்தே
பூவுலக வின்பப் பொருளருளும் (2)பொன்னெழுத்தே
தேவுலகுக் கப்பாற் சிறப்பருளும் (3)ஐந்தெழுத்தே
சிவசிவ ஐக்கியமாச் சேர்ந்தோர் சொல் (4)மூவெழுத்தே
பாவலர்தம் நாவிலின்பப் பாட்டருளும் பண்ணவனே
காவுலவு மலர் காளி காமடுவிற் கண்ணுதலே
பூவலருந் தாரசைய ஆடுக பொன்னூஞ்சல்
பொலிகருணைத் தேன் சொரிந்தே ஆடுக பொன்னூஞ்சல்.

1 ஓம் 2 நமசிவாய 3 சிவாயநம 4 சிவயவசி



4 இனத்துடனே மந்திகளும் ஏறியிருந் தின்பமுடன்
தினப்பூசை கண்டுதிருப் பிரசாதமுண்டுலவும்
வனப்பமையும் ஆல்வேம்பு மாவரசு மகிழ் மருதம்
மனக்கினிய நிழல் செய்ய மந்தமாருதம் வீசச்
புனற்கினிய நீரோடை புறஞ்சூழச் செந்தமிழின்
இனிப்பொலிசேர் எழிற்காளி காமடுவில் எம்பெருமான்
தினைப்பொழுதும் நீங்காமே யாடுக பொன்னூஞ்சல்
செல்வமெலாம் எமக்கருளி யாடுக பொன்னூஞ்சல்

5 உருப்பொலிந்த தம்பிகரம் ஒருசூலம் தான் கொடுத்தே
தெருக்கரையில் நின்றெவர்க்கும் செய்கருணையென நிறுத்தித்
தருக்ககன்ற மனத்துடனே தாழ்ந்து நிற்பார்க்கவர் வேண்டும்
பொருட்பேறும் கலைப்பேறும் புண்ணியஞ்செய் பெரும்பேறும்
அருட்பேறும் உவந்தளிக்கும் அறிவுருவே வளர்செந்நெல்
திருப்பொலிசூழ் வயற்காளி காமடுவில் எழுந்தருளும்
மருப்பேந்து மலர்க் கரத்தாய் ஆடுக பொன்னூஞ்சல்
மன்னவர் செங்கோல் புரந்தே ஆடுக பொன்னூஞ்சல்

6 தேடுகல்வி ஞானம் திடசித்தம் தேகசுகம்
பீடுபெறு நல்லோர் பெருநட்பும் செல்வாக்கும்
நாடியுனதடிக்கே பக்திசெயும் நன்மனமும்
கூடியுன்னோடொன்றுகும் கூட்டுறவும் ஈந்தருளி
வாடியலையாத மனநிறைவும் தந்தருளி
நீடூழி வாழ்காளி காமடுவில் நித்தியனே
நாடு வளம்பெறவே யாடுக பொன்னூஞ்சல்
நன் மாதவர்க்கருளி யாடுக பொன்னூஞ்சல்.

7 அன்பும் பணிவும் அடக்க முடனருளி
மன்புவியில் தன்னுயிர்போல் மன்னுயிரும் யாம்பேணும்
இன்ப நிலையும் எமக்கருளி எம்பெருமான்
உன்புகழெம் பாட்டில் உரைக்கும் திறனருளி
என்புங் கனியத் திருக்காட்சி யீந்தருளும்
தென்பொலி செந்தமிழ்க்காளி காமடுவில் திருமூர்த்தி
பொன்பொலி செம்மேனியனே ஆடுக பொன்னூஞ்சல்
புலவோர்க் கருள்புரிந்தே யாடுக பொன்னூஞ்சல்.

8 சக்தி பலவருளி வீரமொடு கருணை
வைத்தெம் மனத்திற் சுதந்திர நல்வாழ்வருளி
நித்தம் புரந்தின்ப துன்ப நிலைகளிலே
சித்தசமாதானம் சேர்த்துச் சிவகுமரா
அத்தனையும் நின்னடிக்கே அர்ப்பணம் செய் புத்தி தந்து
புத்தொளிசேர் நற்காளி காமடுவிற் புண்ணியனே
சித்தாந்த மெய்ப்பொருளே யாடுக பொன்னூஞ்சல்
செய்பிழைகள் தீர்த் தெம்மை யாடுக பொன்னூஞ்சல்.

9 சங்கத் தமிழும் சகல மொழிக்கலையும்
தங்குந் திருமுகத்து ஞானத்தனி வடிவே
எங்கும் நிறைந்தொளிரும் வேதாந்தப் பேரொளியே
எங்கள் வினை தீர்க்கும் மருந்தே மதந்தோறும்
பொங்குங் கருணை பொழியுந் திருமுகமா
தங்கமே தண்காளி காமடுவில் தற்பரனே
மங்கள மெங்கும் பொலியி ஆடுக பொன்னூஞ்சல்
வையமெலாம் வாழ்வுபெற ஆடுக பொன்னூஞ்சல்.

### மங்களம்

கற்பக விநாயகர்க்குச் செய மங்களம் - ஸ்ரீ
காளிகா நாயகர்க்குச் சுபமங்களம்
வற்றா அருள் மழைக்குச் செயமங்களம் - சக்தி
வல்லபை சமேதருக்குச் சுபமங்களம்
சிற்குண சொரூபருக்குச் செயமங்களம் - நாளும்
சித்திபுத்தி சேர்ப்பவர்க்குச் சுபமங்களம்
வித்தை வடிவானவர்க்குச் செயமங்களம் - வரும்
விக்கினங்கள் தீர்ப்பவர்க்குச் சுபமங்களம்
சொற்பதம் கடந்தவர்க்குச் செயமங்களம் - பரஞ்
சோதி வடிவானவர்க்குச் சுபமங்களம்
அற்புத பரம்பொருட்குச் செயமங்களம் - நித்தி
யானந்த ரூபருக்குச் சுபமங்களம்
குற்றம் பொறுப்பவர்க்குச் செயமங்களம் - எங்கள்
குலதெய்வ மானவர்க்குச் சுபமங்களம்
உற்சவ கணேசருக்குச் செயமங்களம் - ஸ்ரீ
ஓங்கார ரூபருக்குச் சுபமங்களம்.



# ஆண்டவனிடம் வேண்டுவது யாது?

– பண்டிதர். சீ. தம்பிராசா –

வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈபவன் ஆண்டவன். மனிதனே தான் நினைத்தவற்றை யெல்லாம் அவனிடம் வேண்டுகின்றான். ஒருவனது வேண்டுதல் அவனது தேவைகளைப் பொறுத்துப் பல்கிப் பெருகிவிடுகின்றது. கல்வி நன்கு கைவரவேண்டும். அது பெற்றால், உயர் மதிப்புள்ள உத்தியோகம் வேண்டும். உத்தியோகத்தில் உயர்ந்த சம்பளம் பெற்றால் மட்டும் போதாது. கைலஞ்சமும் வேறு வேண்டிக் கிடக்கிறது.

நிலமில்லாதவனுக்கு நிலம் வேண்டும். அது பெற்றால், அழகானதொரு வீடுவேண்டும். வீடு மட்டுமிருந்துபோதுமா? வீட்டில் சுகித்திருக்க மனைவி வேண்டும். அடுத்து குழந்தைகள் வேண்டும். இவற்றுக்கெல்லாம் மேலாகப் பணம் வேண்டும். தனிமனிதனது வேண்டுதல் இவ்வாறே நீண்டு கொண்டு போகுமானால், மனிதஇனத்தைப் பொறுத்த அளவில் வேண்டுதல் பட்டியலின் எண்ணிக்கையைச் சொல்லவும் முடியுமா? மனிதர்களின் ஆசைகளை வரையறுத்துச் சொல்ல முடிந்தால் அவர்களின்தேவைகளையும்வேண்டுதல்களையும்வரையறுத்துச் சொல்ல முடியும். சமுத்திரத்தைப் போலப் பரந்தது மனிதனின் ஆசை. சமுத்திரத்திலடிக்கும் அலைகளைப் போல அளவிறந்தது அவனது வேண்டுதல்கள்.

வேண்டுதல் நிறைவேறினால் மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியின் பயனாய் இன்னும் அடுத்த அடுத்த வேண்டுதல்களுக்குத் தூண்டிவிடுகிறது. வேண்டுவது கிடைக்காவிட்டால் துன்பம். ஏமாற்றம். இது தொடர்ந்து வந்தால் சலிப்புத்தட்டிவிடுகிறது. வாழ்க்கை வரண்டு கசந்தே போய்விடுகிறது. வேண்டுவது கைகூடினாலும், கைகூடாவிட்டாலும் நாமடைவதென்ன? நிம்மதியற்ற வாழ்வு தானே! நித்திய சுகத்தை மனச்சமாதானத்தை நமது வேண்டுதல்கள் நமக்குப் பெற்றுத் தருகின்றனவா? சந்தோஷமும் சஞ்சலமும் மாறிமாறி

அலையடித்து மனமாகிய கடலில் ஒரே கொந்தளிப்பையே காண்கிறோம்.

ஆகையினால் நாம் வேண்டுவனவற்றுக்கு ஒரு முடிவில்லையா? அவைகளைவரையறுத்துக்கொள்ளவேண்டாமா? நாம் வேண்டிப் பெறுபவை நம்மைமேலும்மேலும் ஆட்டி அலைக்காமற் பார்த்துக் கொள்ள வேண்டாமா? அவைகள் ஆசையை வளர்ப்பதற்குப் பதில் ஆத்மீக சிந்தனையை வளர்த்து சாந்தியும் சமாதானமும் பெற்றுத்தர வேண்டாமா? நமது வேண்டுதலினால் நாம் நித்திய இன்பத்தைச் சுவீகரித்துக் கொள்ள வேண்டாமா? இவை நாம் சிந்திக்க வேண்டியவை.

ஆம்! நமது சிந்தனைக்கு அருட் செல்வர்கள் செய்யும் உதவி என்ன? அவர்களுடைய அனுபவத்திலிருந்து நாம் காண்பதென்ன? வள்ளுவப் பெருந்தகை சொல்கிறார்:—

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல'' என்று.

ஆண்டவன் விருப்பு வெறுப்பு இல்லாதவர். நாமோ விருப்பு வெறுப்பை நிறைய உடையவர்கள். நம்மை இறைவனிலிருந்து பிரிப்பதும்-அதிதூரமாக்குவதும் இந்த விருப்பு வெறுப்புகளே-பற்றுக்களே. ''பாம்பறியும் பாம்பினது கால்'' என்பார்களே, அதுபோலவும், ''கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'' என்பது போலவும் விருப்பு வெறுப்பற்ற ஒருவரை, விருப்பு வெறுப்பற்ற ஒருவரால்தான் அடைய முடியும். அப்படிப்பட்டவர்களுக்கே இடும்பை—சஞ்சலம்—ஒருபோதும் ஏற்படாது.

மனித சமூகத்தின் நாளாந்த வேண்டுதல்கள் ஆண்டவனைப் பற்றி நிற்பதற்குப்பதில், உலகத்தையே பற்றி நிற்கின்றன. இதனால் பற்றுக்கள் தடித்து வளர்ந்து கொண்டே போகின்றன. குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிய நிலைமை இது. இந்த நிலமைக்குக் காரணம் மனிதசமூகத்தின் வேண்டுதலே.

சிவநேசச் செல்வர்களாகிய மெய்யடியார்களிடம் இதற்கு மாறுபட்ட ஒரு நிலையையே நாம் காண்கிறோம். அவர்களும் நம்மைப்போல் ஆண்டவனிடம்வேண்டுதல் விண்ணப்பங்களைச்சமர்ப்பிக்கின்றார்கள்தான். ஆனால், எதைவேண்டுகின்றார்கள்? இந்தஇடத்திற்தான் பெரும் வித்தியாசமுண்டு. நாம் பொன்னைப் பொருளை வேண்டுகின்றோம். ஆட்சி அதிகாரங்களை விரும்புகின்றோம். பட்டம் பதவிகளைக் கேட்கின்றோம். ஆனால், அடியார்களோ இவை ஒன்றையுமே எதிர்பார்க்கவில்லை. துச்சமாகக்கூட இவைகளை மதித்தார்கள். உள்ளத்திலே இயல்பாக எழுகின்ற அன்பின் பெருக்கினால் ஆண்டவனைக் கும்பிட்டார்கள். ''கூடும் அன்பினிற் கும்பிட்டார்கள்'' அவ்வளவேதான். இதற்குப் பிரதிபலனாக வேறு எதையும் அவர்கள் வேண்டினார்களில்லை. வீடுபேற்றைக் கூடக் கேட்டார்களில்லை ''வீடும் வேண்டாவிறலின் விளங்கினார்'' இவர்கள் அன்பின் தூய்மைதான் என்னே!



சிவனிடத்தன்பைவிடச் சிவனடியார்க்குப் பெருந்தனம் வேறெதுவுமில்லை. அவர்கள் பெரிய இடத்தைப்பற்றி நின்றார்கள்-பற்றற்றான் பற்றினைப்பற்றி நின்றார்கள். ஆதலின், கேடும் ஆக்கமும் கிஞ்சித்தும் இல்லாதவர்களாயினர். மண் ஓட்டையும் பொன்னோட்டையும் ஒன்றாகவே மதிக்கும் உள உரன் அவர்களிடங் காணப்பட்டது. அப்பர் சுவாமிகள் உளவாரத் தொண்டு செய்த ஒருசந்தர்ப்பத்தில், அங்கே காணப்பட்ட மண்கட்டி, பொன்கட்டிகளையெல்லாம் புல்லோடு புல்லாய் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டுபோய் வீசி எறிந்தார் என்பது நாமறிந்தது. இதுவே ''ஓடும் செம்பொனும் ஒக்கவேநோக்குகின்ற'' பேராண்மை.

"கேடும் ஆக்கமும் கெட்டதிருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டாவிறலின் விளங்கினார்"

என்று சேக்கிழார் பெருமான் திருக்கூட்டச் சிறப்புப் பாடியிருப்பதிலிருந்து அடியார்களுடைய உளப்பண்பும், அவர்கள் வேண்டுதலும் எத்தகையது என்பது புலனாகும்.

அன்பை விட நாம் மற்றெதையும் வேண்டுவோமாயின் அது நமது ஆத்ம ஈடேற்றத்துக்கு பயன்படாததாகவே அமையும். ஆண்டவன் முற்றறிவினனாதலின் நமக்கு வேண்டுவன யாவை என்று அவனறிவான். அவனிடத் தன்புமட்டும் நமக்கிருக்குமானால் அவ்வக் காலங்களில் நமக்கு வேண்டி

யவற்றை அவன் அருள் செய்வான். அன்பரோடு அகலாது என்றும் உடன் உறைகின்றான்.

“ஆனாவறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்”

என்பது திருவருட்பயன். வானாடர் எனப்பட்ட தேவர்கள் ஆண்டவனை அறியாத காரணம் அவனடிக்கன்பு பூணாமையே என்றும், அடியவர்களுக்கு எளிதில் காட்சி கொடுப்பதும் அவர்களோடு அகலாதுறைவதும் அன்பையே வேண்டி அன்பு செய்து வாழ்தல் ஒன்றேகாரணம் என்றும் இதிலிருந்து அறிய முடிகிறது.

இன்னும், சங்கப்புலவர் பரம்பரையிலே வந்த தங்கப்புலவரான கடுவன் இளவெயினனார், முருகப்பெருமானிடம் வேண்டுதல் செய்யுஞ் சந்தர்ப்பத்தில் எவற்றை இரந்து கேட்கிறார்? பரிபாடல் கூறுகிறது கேளுங்கள்:

“.. .. யாமிரப்பவை
பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே”

என்பது அவரது வேண்டுதல். “கடம்ப மலர் மாலையை அணிந்த முருகப் பெருமானே, நின்னை யாம் இரந்து வேண்டுவன அனுபவிக்கும் பொருளும், அதற்குக் காரணமான பொன்னும் அவ்விரண்டாலும் நுகரப்படும் போகமுமல்ல. எமக்கு வீடு பயக்கும் நின்அருளும், அதனைப்பெற நின்னிடத்தேசெய்யும் அன்பும், அவ்விரண்டாலும் வரும் அறமுமாகிய இம்மூன்றையுமே வேண்டுகின்றோம்” அருள் புரிவாயாக என்று வேண்டினார்.

இத்தகைய அனுபூதிச் செல்வர்களது வேண்டுதலும் அதன்பேறாக அவர்கள் பெற்றிருந்த புனிதவாழ்வும் நம் சிந்தனையைத் தூண்டுமானால், நாம்ஆண்டவனிடம் வேண்டுவது யாது? அரனடிக்கன்பு செய்வதைத் தவிர மற்றெவையும் நாம் வேண்டத்தக்கவையல்ல. அவை நம் ஆசைக்கும் அறியாமைக்கும் அளவுகோலாக முடியுமேயன்றி “ஆத்மஜோதி” நம்முட் பிரகாசிக்க வழிவகுக்கா என்பது சத்தியம். இந்த



# கதை கேட்ட கள்வன் கண்ணனைக் கண்டான்

— ஸ்வாமி நிர்மலானந்தா —

பகவான் கண்ணனும் ஒரு கள்வன் தானே! அன்று பிருந்தாவன கோபியர்களின் உள்ளும், புறமும் களவாடியவன் தானே! அவன்தனது லீலா விநோதத்தைக் கேட்பவர்களின் உள்ளத்தைக்கவரத்தானேசெய்கிறான். அன்றுகம்ஸனின் இதயத்திலும், அக்ரூரர் இதயத்திலும் அமர்ந்த அந்தக்கண்ணன் தானே. இன்றும் அவன் கதை எங்கு நடக்கிறதோ அங்கு காட்சி தந்து அன்பர்களை ஆட்கொள்கிறான். அவன் கதையைக் கேட்ட கள்வனுக்கு காட்சி தந்தருளியதை விளக்குவதே இக் கட்டுரை.

வட நாட்டிலே மகா பக்தன் மாதவதாஸ் என்ற ஓர் ஹரிகதா பிரசங்கி வாழ்ந்து வந்தார். அன்னார் ஹரிகதை செய்யும்போது கேட்பவர்களுக்கு கதைபோல் தோன்றச் செய்யாது. கண்முன் நடக்கும் காட்சி போல பக்தி பரவசத்துடன் விளக்குவார். ஸ்ரீமத் பாகவதம் சொல்லுவதென்றால்மகாப்ரபுசுகப்பிரம்மமாகிவிடுவார். இவருரையைக் கேட்பவர்கள் அடுத்து என்ன நிகழ்கிறது என்றறியாது

முன்பக்கத் தொடர்ச்சி

உண்மையையே பொய்யடிமை தீர்ந்த மெய்யடியார்கள் சரித்திரத்திலிருந்து நாமறிகிறோம்.

நம் ஆத்மா ஒன்று மட்டுமே மெய். அதைத் தாங்கி நிற்கும் மெய் எனப்பட்ட உடல் பொய் என்பது அனைவர்க்கும் வெட்டை வெளிச்சம். எனவே, நாம் மெய்யைப்பற்றி நிற்காது பொய்யைப்பற்றி நிற்கலாமா? மெய்யான ஆத்மாவுக்காக வேண்டாது, பொய்யான உடலுக்காக வேண்டலாமா? மெய்யும் பொய்யாகிப் போகின்ற போதத்திலே மலர்ந்த முகத்துடன் மரணத்தை வரவழைக்கவேண்டாமா? இவற்றுக்கெல்லாம் ஒரேவழி, ஆண்டவன் திருவடிக்கன்பு செய்து அவன் திருவருள் ஒன்றைமட்டுமே வேண்டி நிற்பதாகும்.

தம்மை மறந்துவிடுவார்கள். கதை முடிந்து வீட்டுக்குத்திரும்பும்போது புண்ணிய சரித்திரத்தை கேட்ட செவியில் உலக விஷயங்களைப் பற்றிய வாக்கியங்கள் புகுந்து விடாதவாறு காதை பொத்திக் கொண்டும், அவன் ரூபத்தை மானஸீகமாகக் கண்ட கண்ணால் புறபொருளைக் காணக்கூடாது என்று கண்களை மூடிச்செல்வோரும் உண்டு.

ஒரு நாள் தான் வாழும் நகரத்தின் ஆலயத்தில் பக்த மாதவதாஸ் பாகவத கதாப்பிரசங்கம் நடத்தி வருகிறார். அதே ஊரில் சதா திருடுவதையே ஜீவனமாகக் கொண்ட ஒருவன் இருந்தான். அவனை அந்த நகரத்தில் உள்ளோர் எல்லோரும் அறிவார்கள். அத்திருடன் ஒருநாள் வேறு எங்கும் திருட்டு கிடைக்காத காரணத்தால் பாகவதம் நடக்கும் கூட்டத்தில் யாரிடம் திருடலாம் என்று கவனம் செலுத்தியவாறு மூலையில் நின்று கொண்டிருந்தான். அவன் கவனத்தை மாதவதாஸ் அணிந்து கொண்டிருந்த காதணியிலும், அவர் முன்பாக கிடக்கும் பண்டங்களிலும் செலுத்தினான். கதை எப்போது முடியப்போகிறது என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அன்றைய தினத்துக் கதையில் பகவான் கண்ணனும், பலராமனும் பசுக்களை மேய்க்கப் போகும் புனித தினமாகும்.

அன்று கண்ணனின் அன்னை யசோதா தன் செல்வக்குமாரர்களுக்கு வைர, வைடூரிய பொன்நகைகளையும், பட்டாடைகளையும் அணிவித்து அனுப்பும் கட்டத்தை மாதவதாஸ் வர்ணிக்கிறார். கண்ணன் பலராமருடைய நீலமேக ஸ்யாமள கோமள ரூபத்தையும் வர்ணிக்கிறார். அதே சமயம் மூலையில் நின்று கொண்டு கதை கேட்கும் கள்வனின் கண்முன் அந்த மனமோஹன் ரூபங்களும் அவர்களை அலங்கரித்துள்ள நகைகளும் பிரகாசிக்கின்றன. ஆனால் அது கதையாக அவனுக்குத் தோன்றவில்லை. அவன் மனம் தினந்தோறும்அற்பபொருள்களைத்திருடிபயப்படுகிறோமே, அதுஎதற்கு? இந்தவயிற்றுக்குத்தானே! இந்த இரு பாலர்களின் அணிகளையும் திருடிக் கொண்டு வந்துவிட்டால் நாம் நம் வாழ் நாள் பூராவும் ஏன் நம் பரம்பரையே ஏழேழு தலை முறைக்கும் கோடீஸ்வரர்களாக வாழலாமே என்று மனக்கோட்டை கட்டிநின்றான்.

அன்றைய கதை முடித்து பக்த மாதவதாஸ் எழுகிறார். ஜனங்கள் தாங்கள், தாங்கள் கொண்டுவந்த சிறு சிறு வெகுமதிகளை பாதத்தில் சமர்ப்பிக்கிறார்கள். கள்வன் தன் கவனத்



தை மறந்து கண்ணனின் மோஹன ரூபத்தில் மோஹித்து நிற்கிறான். மாதவதாஸ் பொருள்களை எடுத்துக் கொண்டு வீடுநோக்கி நடக்கிறார். அவர் பின்னாலேயே அத்திருடனும் போகிறான். மாதவதாஸை கள்வன் திருத்தி இது பரியந்தம் தாங்கள் கூறிய பிரசங்கக்கதை உண்மைதானா! அவர்களை எங்கு, எப்படிக் கண்டு பிடிப்பது? இதன் பூரா விவரத்தையும் எனக்கு அறிவிக்க வேண்டும். என் வாழ்நாளில் இந்த மாதிரி ஒரு பெரிய திருட்டு செய்ய வேண்டும். மாதவதாஸிக்கு இந்த திருடனை முன்பே பெரியும். இந்த தர்ம சங்கடமான சமயத்தில் பகவான் கதை பொய் என்பதா? மெய்யென்பதா? என்ற சஞ்சலம் அவருக்கு. இவனோ திருடன் மெய் என்று சொல்லி தப்பி விட்டால் அவன் இடத்தை காண்பி என்பானே. பொய் என்று சொன்னால் கண்ணனை இகழ்ந்ததாகும். மேலும்கையிலுள்ள பொருளுக்கும், உயிருக்கும் ஆபத்து வரலாம் என்று மனம் திடுக்கிட்டு தடுமாறி நிற்கிறார். இது நடந்தது பொய் அல்ல என்று தப்பிக்கிறார். ஆனால் திருடன் விடுபவனா? நான் இப்போதே அவர்களிடம் போகப் போகிறேன். அதற்கு பிருந்தாவனத்திற்குப் போகும்வழியும் அந்தக் குழந்தைகள் பசுக்களை ஓட்டிக் கொண்டு வரும் நேரமும், அவர்களுக்கு எந்தப் பொருளைக் கொடுத்து மயக்கலாம் என்பதையும் தயவுசெய்து சொல்லிவிட்டு நீங்கள் பயமின்றி போகலாம் என்றான். மாதவதாஸுக்கு மேலும் அதிக துயரம் உண்டாகிறது. திருடனோ உண்மை என்று நம்புகிறான். இவன் பிருந்தாவனம் போக எத்தனம் செய்து விட்டான் என்றால் நமக்கு ஆபத்துதானே என்று ஐயப்படுகிறார். திருடனிடம் மாதவதாஸ் பிருந்தாவனத்திற்கு பாதை யமுனை நதிக்கரை யோரமாக செல்கிறதென்றும் அந்த தெய்வீக பாலகர்கள் பசுக்கூட்டத்தை ஓட்டிக் கொண்டு யமுனை துறையில் கதம்பமரத்தடியில் முரளிகானம் செய்வார்கள் என்றும் அவர்களுக்கு வெண்ணை, கற்கண்டு என்றால் வெகுபிரியம் என்று சொல்லி இதைக் கொடுத்தே தான் கோபியர்கள் அவனைக் கவர்ந்தார்கள் என்று கூறி விட்டு தப்பிச் செல்லுகிறார்.

பக்த மாதவதாஸ் தப்பிச் சென்றாலும், மனம் சமாதானமாகவில்லை. இதை திருடன் உண்மை என்று நம்பி இப்பொழுதே பிருந்தாவனம் செல்ல எத்தனம் செய்து அங்கு செல்வான். இவன் கைக் கொண்டு செல்லும் வெண்ணையையும், கற்கண்டையும் அங்குள்ள பண்டாக்கள் பிடிங்கிக் கொண்டு விரட்டி அடிப்பார்கள். ஏன் ஐயா! பொய் சொன்

னீர்கள் என்று நம்மை துன்புறுத்தி உயிரைப் போக்கி விடுவானல்லவா என்று எண்ணி துக்கப்பட்டு வீடு செல்கிறார். அன்று தூக்கமும் வரவில்லை. நாமும், நாளைக் காலையிலேயே இந்த ஊரைவிட்டு வேறுஊர் சென்று விடலாம் என்று அமைதிகொள்கிறார். அந்த மாயக் கோபாலனை யோகிகளும், ஞானிகளும், பக்தர்களும் நவவித பக்திமூலம் அடையப்பாடு பட்டும் அறிந்தவர் ஒரு சிலரே! ஆனால் ஒருவித பக்தி சாதனையும் செய்யாத திருடனின் மனக்கண் முன்னால் பக்தப்பிரியன் காட்சிதந்து கொண்டே இருக்கிறான். அன்று ஏழை சபரிக்கும் காட்சி தந்தவனல்லவோ அவன்!

ஆதிமூலமே என்றழைத்த யானைக்கும் காட்சி தரவில்லையா? ஏன். பாலகன் நாமதேவன் தந்த உணவை புசிக்கவில்லையா! ஆனால் இந்த பக்தர்கள் பாவம் வேறு. ஆனால் இத் திருடனின் பாவமோ திருட்டுக்காக வேண்டியே அந்த ரூபத்தை நினைக்கிறான், நம்பினோருக்கு நடராஜன்தானே! இவன் (இத்திருடன்) நம்பியதால் அவன் முன்னே நிற்காது எங்கு போவான். மாதவதாஸைவிட்டு பிரிந்ததும் கள்வன் வீடு சென்றான். தன் பெற்றோரிடத்தில் நான் இன்று பெரிய திருட்டுக்கு துப்பு தெரிந்து வந்திருக்கிறேன். அதற்கு இப்போதே பிருந்தாவனம் போகவேண்டும் என்று சொல்லிவிட்டு வீட்டிலிருந்த வெண்ணையையும், கற்கண்டையும் தன் துணியில் கட்டிக் கொண்டான். பெற்றோர்கள் இது கதையில் நடந்தது நிஜமென்று எண்ணி விட்டாய் என்றனர். உடனே திருடன் என்னைப் பெற்றவர்களுக்கு என் புத்திதானே இருக்கும். மாதவதாஸ் பொய்யா சொல்லுவார் என்று வீட்டை விட்டு நகருகிறான். அவன் கண் முன்பாக பிருந்தாவனக் காட்சிகளும், பசுக் கூட்டங்களும் தென்படுகிறது. ஊரின் எல்லை தாண்டியதும் காடு, மேடு என்று பாராது நடந்து செல்கிறான். ஒரு பெரிய படுகுழியில் விழுந்து விடுகிறான். ஆனால் அவன் விழுந்ததும் தான் யமுனைத்துறையில்தான் அமர்ந்து இருப்பதாக எண்ணுகிறான். அவன் முன்பாக ஒரு குழியில் ஜலமும் இருக்கிறது. பெரிய மரம் ஒன்றும் இருக்கிறது. அது அவனுக்குக் கதம்ப மரமாகத் தோன்றுகிறது. இரவைத் தூங்கிக் கழிக்கலாம் என்று படுத்துக் கொள்ளுகிறான். சிறிது நேரத்தில் கண் விழிக்கிறான். ஆனால் அவனுக்குப் பொழுது புலர்ந்ததாகத்தெரிகிறது. இயற்கைக் காட்சிகளும், பட்சியினங்களின் கூவுதலும், பசுக் கூட்டங்களின் வருகையும் புழுதி எழுவதும்,



இரு பாலகர்கள் மாதவதாஸ் வர்ணித்த அலங்காரத்துடன் வருவதும் தெரிகிறது. அப் பாலகர்கள் இவன் அமர்ந்துள்ள இடத்தில் வந்து முரளிகானம் செய்கிறார்கள். பசுவினங்கள் கானத்திலே மூழ்கி நிற்கின்றன. கள்வனோ மனதால் கண்ட காட்சிகள் கண்முன்னால் நிற்பதை உணர்ந்து மாதவதாஸை வாழ்த்துகிறான்.

இனி நாம் வந்த வேலையைக் கவனிக்கலாம் என்று திருடன் இப் பாலகர்களை நீங்கள் முரளி கானத்தை நிறுத்துங்கள். நான் யார் என்று தெரியுமா? திருடன், உங்கள் இடமுள்ள அணிகளை எல்லாம் கழற்றிக் கீழே வையுங்கள். இல்லாவிட்டால் உங்களையே தூக்கிச் சென்று விடுவேன் என்கிறான். பக்தவத்சலர் கண்ணனோ பயந்தவர் போல் நடித்து, பலராமனின் கையைப் பிடித்துக்கொண்டு எங்கள்அன்னை எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த அணிகளை அணிவித்துஅலங்கரித்துஅனுப்பியுள்ளார். நீஇதைக்கழற்றித்தரும்படி கேட்கிறாயே. எங்களுடன் எங்கள் வீட்டுக்கு வந்தால் உனக்கு வேண்டிய மட்டும் எங்கள் அன்னையிடம் கேட்டு வாங்கித் தருகிறோம் என்றார். இவர்களின் இன்மொழிகள் ஏதோஒருஆனந்தபரவசத்தைஉண்டாக்குகிறது. மாதவதாஸ் இவர்களுக்கு வெண்ணையும், கற்கண்டும் பிரியம் என்று சொன்னது நினைவு வந்து தான் கொண்டு வந்த வெண்ணையையும், கற்கண்டையும் அவர்களுக்கு அளித்தான். கண்ணனோ ஓடி வந்து எடுத்து வாயில் போட்டுக் கொள்கிறார். இவைகள் எனக்குப் பிரியம் என்று உனக்கு எப்படித் தெரியும் என்கிறார். பக்த மாதவதாஸ் தான் சொன்னார் என்கிறான் திருடன்.

மன மோஹனக் கண்ணன் திருடனிடத்தில் என் நகைகளை எல்லாம் நீயே கழற்றிக் கொள் என மொழிகிறார். ஆனால் திருடனின் மனமோ மாறுகிறது. யோகியர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கண்ணன் ஏன் திருடனிடமும் அமர்ந்து விட மாட்டான். உங்களைக் கண்டு கொண்டாலே போதும் போல் தெரிகிறது. இவ்வளவு காலம் எவ்வளவோ திருடி விட்டேன். இன்றோ உங்கள் தரிசனத்தால் நான் கோடீஸ்வரனாக இருப்பது போல் தெரிகிறது. நான் தினமும் இதே நேரம் வந்து கண்டு போகிறேன். எனக்கு அந்த ஆனந்தமே போதும். ஆசையுடன் உங்களுக்கு அணிவித்த அணியைத் திருடிச் சென்றால் உங்களது அன்னை சங்கடப்படுவாள் என்று சொல்லுகிறான்.

திருடன் இனி அதிக நேரம் இருந்தால் ஜன நடமாட்டம் அதிகமாகி தன்னைப் பிடித்துக் கொண்டு விடுவார்கள் என்று எண்ணித் திரும்புகிறான். குழியை விட்டு மேலே வந்து நேராக மாதவதாஸரிடம் வருகிறான். இவைகள் எல்லாம் நடுநிசியில் நடந்த காட்சிகள். மாதவதாஸுக்கோ நித்திரையில்லாது திருடன் திரும்பி வந்து விட்டால் என்ன செய்வது என்ற விசாரம். திருடன் வந்து கதவைத் தட்டுகிறான். பன்முறை கதவைத் தட்டியபோது மாதவதாஸ் பயந்து மாடி ஏறி ஒளிந்து கொள்கிறார். கதவு திறக்காததால் உடைத்துத் தள்ளிக் கள்வனால் கதவு திறக்கப்படுகிறது. இரவு பகல் என்றறியாத திருடனுக்கு இரவு, பகல் பொழுதாகத் தெரிகிறது. வீட்டிற்குள் மாதவதாஸைக் காணாது மாடிக்குச் செல்லுகிறான். பயத்துடன் மறைந்திருந்த மாதவதாஸ் திருடனின் முகத்தில் தெய்வீகப் பிரகாசம் வீசுவதை உணர்கிறார். இவன் கண்ணனைக் கண்டு வந்தான். நாம் அவன் புகழைச் சொல்லித்தானே ஜீவிதம் செய்தோம். இந்தத் திருடனைப் போன்று நமக்கு சிரத்தை, பக்தி, விசுவாஸம் இல்லையே என்று மனதில் எண்ணி திருடனின் காலில் விழுந்து நமஸ்கரிக்கின்றார். திருடனும் மாதவதாஸ் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து அவர் மூலம் முந்திய தினம் பிருந்தாவனத்தில் இரு மோஹன பாலகர்களின் தரிசனம் கண்டதும் அது மூலம் தனக்கு ஒரு பெரிய ஐஸ்வரியம் கிட்டியிருப்பது பற்றியும் சொன்னான். உயிருக்குப் பயந்து மறைந்திருந்த மாதவதாஸ் அந்தர்மியான கண்ணன் புகழ்பாடி, ஆடி. பக்திப் பரவசமாகி நர்த்தனம் செய்கிறார். தானும் திருடன் கண்டகண்ணனை மனமாகிய பிருந்தாவனத்திலே காண்கிறார்.

நாமும் பூரணமாக அவன்பால் மனதை நாட்டி சிரத்தையுடன் அவன் கதைகளைக் கேட்கவும், துதிக்கவும் செய்வோமானால், பிருந்தாவனமும், யமுனைத் துறையும், கதம்ப மரத்தடியும், கண்ணன் விளையாடிய மண்மேடும், அவன் திருவிதழிலிருந்து பொழியும் முரளி நாதத்தையும் கேட்கலாம், ராஸ லீலையையும் காணலாம்.

''ஜெய் கிருஷ்ண பகவான்''

இப் பத்திரிகை ஆத்மஜோதி நிலையத்தாரால் ஆத்மஜோதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 15-7-1964.

## வாய்வு சூரணம்

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு மலபந்தம், அஜீரணம், கை கால் அசதி, பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்த மயக்கம், பித்த சூலை, புளியேப்பம், நெஞ்சுக் கடுப்பு முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த சூரணம்.

தபாற் செலவு உட்பட டின் ஒன்று 4 ரூபா 25 சதம்

[பத்தியமில்லை]

சம்பு இண்டஸ்ட்ரீஸ் – அரிசிப்பாளையம் சேலம் -9. (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:-

ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி.

மலாயாவில் கிடைக்குமிடம்:

ஸ்ரீ கணபதி & கம்பெனி,

66, பெல்பீல்டு ஸ்ட்ரிட், ஈப்போ P.O. [மலாயா.]

## ஆத்மஜோதி மலர்

நீங்கள் எதிர்பார்த்திருந்த 'ஆத்மஜோதி மலர்' வெளிவந்து விட்டது. மலரினுள்ளே நாற்பதுக்கு மேற்பட்ட பெரியார்களின் கருத்துக்கள் உங்களுக்கு விருந்தாகின்றன. நூற்றைம்பது பக்கங்களிலும் ஆத்மீகக் கருத்துக்கள் சிறந்து விளங்குகின்றன. முகப்பில் ''என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதன்'' மூவர்ணப் படத்துடன் காட்சி தருகின்றார். அவரை நினைப்பவர்க்கெல்லாம் பரகதி உண்டு.


விலை தபாற் செலவுட்பட 2—50 ஆகும்

ஆத்மஜோதி நிலையம்,

நாவலப்பிட்டி – சிலோன்.

போன் – 353

Registered at the G. P. O. as a Newspaper. M. L. 59/300



உயர்திரு

ஸ்வாமி

# சுப்பிரமணியானந்தா

(த. வீ. சுப்பிரமணியம்)

நாவலர் உதித்த யாழ்ப்பாண நல்லூரிலே, திவ்ய ஜீவன காவலனுய்த் தோற்றினுர் - உயர்திரு **ஸ்வாமி சுப்பிரமணியானந்தா** அவர்கள்: சாந்தமே உருவாயெடுத்தார். சன்மார்க்க நெறி நின்முர். சார்ந்த பக்தர் குழாம் சமரச நிலே ஓங்கச் செய்தார். சற்குரு மகராஜ் இமய ஜோதி **ஸ்வாமி சிவானந்தா** அவர்களின் நற் சீடனுய் ஞான சந்நியாசம் பெற்முர். திவ்ய ஜீவனந் தந்த ஈழத்துப் பெரியார்களுள் தீர்க்கதரிசியாக விளங்கினுர்கள். ஆராய்ச்சிப் பேருரைகள் மேற்கோள் காட்டிப் பேசும் வல்லுந ரல்லராயினும், அன்பும், பண்பும் அற நெறியுந் தாங்கி நின்முர்கள். எங்கெங்கே திவ்ய ஜீவனம் ஈர்த்ததோ- அங்கங்கே பக்திப் பரவசம் பொங்க-கண்ணீர் மல்க-பிரார்த்தனையிற் திளைப்பார்கள். பூதவுடல் விடை கொடாது மறுத்த நேரத்தும் அவர்தம் புண்ணிய ஆத்மா பணிவிடைமேல் பவனி வரும். இத்தகைய பக்த சிகாமணி அவர்களின் பிரிவு ஆத்மீக அன்பர்களுக்கோர் பாரிய நஷ்டமாகும். உயர்திரு ஸ்வாமி அவர்கள் அடக்கமாகவும், அமைதியாகவும் வாழ்ந்தவர். எனவே எல்லோரும் அவர் பேரையும், பெருமையையும் அறிந்திருக்க மாட்டார்கள். அவர், பேர், புகழை விரும்பவோ - அன்றித் தம்மை விளம்பரப் படுத்தவோ முற்படாத பண்பு வாய்ந்தவர். அன்னுரின் அன்பையும், ஆசியையும் பெற்றவர்கள், அந்த அன்புத் திருமுகத்தை என்றும் மறக்கவே முடியாது. உயர்திரு ஸ்வாமி அவர்கள் உயர் சமாதி எய்தியது குறித்து அன்புத் தியானத்துடன் சாந்தி யடைவோமாக.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி.